விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை (06.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 352

## பால்மா, காஸ் விலைகள் அதிகரிக்காது

(கொழும்பு)

பால்மாக்கள் மற்றும் சமையல் எரிவாயுகள் (காஸ்) ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. எனினும் இந்த கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். 20-ம் பக்கம் பார்க்க

## வட, கிழக்கில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை கண்டித்து பேரணி

(மன்னார்)

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் பெண்களுக்கெதிரான வன்முறையைக் கண்டித்தும், அவற்றை நிறுத்தக் கோரியும் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள் மாவட்டம் தோறும் பேரணி நடத்தி வருகிறார்கள். இதனையொட்டி நேற்று வியாழக்கிழமை மன்னார் நகரில் இந்தப் பேரணி நடத்தப்பட்டிருக்கிறது.

நவம்பர் 25 தொடக்கம் டிசம்பர் 10 ஆம் தேதி வரையில் உலகெங்கும் 20-ம் பக்கம் பார்க்க



## மாநகர சபையில் நிறைவேறியது பட்ஜெட்

(யாழ்ப்பாணம)

யாழ். மாநகர சபையில் முன்வைக்கப்பட்ட 2014ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் (பட்ஜெட்) 7 மேலதிகவாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் வரவு - செலவுத்திட்டக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை சபையின் மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்ட அறிக்கை சபையின் பிரதம கணக்காளரினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ் அறிக்கையின் பிரகாரம், 2014ஆம் ஆண்டிற்கான சபையின் மொத்த வருமானங்கள் 595 மில்லி 20-ம் பக்கம் பார்க்க

# இந்தியாவின் அழுத்தம் தொடர்ந்தும் நீடிக்கும்

## 13 குறித்து ஜீ.கே. வாசன் தெரிவிப்பு

*13-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.*



சிங்கள மக்களுக்கு நிகராக தமிழ் மக்களுக்கும் உரிமைகளை வழங்குவதற்கு 13-ம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேணடுமென இந்திய மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பிலான நிலைப்பாட்டில் இலங்கையுடன் இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக்கொள்ளப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையுடன் இராணுவ உறவுகளைப் பேணுவதனை இந்தியா தவிர்த்துக் கொள்ள வேண்டும். 20-ம் பக்கம் பார்க்க

## 292 வர்த்தகர்களிடம் தண்டப்பணம் வசூல்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாகப் பொருட்களை விற்பனை செய்த 292 வர்த்தகர்களிடம் 11 இலட்சம் 28 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக வசூலிக்கப்படுள்ளது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினரால் யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து நீதிமன்ற 20-ம் பக்கம் பார்க்க


## கோடரி வெட்டு; பொருட்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த மூவர் கோடரியால் வெட்டப்பட்டுள்ளதுடன் அவர்களது வீட்டிலிருந்து பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ். உடுவில் கற்குளப் பிள்ளையார் கோவிலடியில் இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில்,

அப்பிரதேசத்தைச் சேர்ந்த எஸ். சண்முகநாதன் (வயது 51), சண்முக 20-ம் பக்கம் பார்க்க



*ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் மற்றும் இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான சர்வதேச பிரதிநிதி சலோகா பெயானி நேற்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்போது...*

## சிங்களக் குடியேற்றங்களும் நில அபகரிப்பும் மும்முரம்

### அமெ. அதிகாரிகளிடம் சிவில் சமூகம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களையும் நில அபகரிப்பையும் மும்முரமாக மேற்கொண்டுவருகின்றது என்று அமெரிக்க தூதரக அதிகாரிகளிடம் கொக்குளாய் பிரதேச சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கொக்குளாய், கொக்குத்தொடுவாய், வெலிஓயா போன்ற பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் பார்வையிடுவதற்கு அமெரிக்க தூதரக அதிகாரிகளான மைக்கேல், ஜெனி உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குழுவினர் நேற்று அப்பகுதிக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்த விஜயத்தின் போது கொக்குளாய் பகுதியில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்து சிங்களக்குடியேற்றங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் அவர்கள் கேட்டறிந்து கொண் 20-ம் பக்கம் பார்க்க

சுந்தர்சன் நிறுவனத்தின் வருடாந்த மாபெரும் மலிவு விற்பனை
14.12.2013 முதல் 22.12.2013 வரை


10,000/- இற்கு மேல் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 50 பேருக்கு 175,000/- பெறுமதியான பரிசில்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய ஆவணப் படத்தை உருவாக்கும் மக்ரே

இலங்கைக்கு எதிரான தனது புதிய ஆவணப் படத்தை உருவாக்கும் பணிகளை சனல் 4 தொலைக் காட்சியின் ஆவணப்பட இயக்குநர் கெலும் மக்ரே ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

2014ஆம்ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவின்கூட்டத்தொடரில் வெளியிடும்நோக்கில் அவர் இந்த ஆவணப்படத்தை உருவாக்கி வருகிறார்.

எதிர்வரும் மார்ச் மாதம் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா ஆகியநாடுகள்இணைந்து இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றை கொண்டு வர திட்டமிட்டுள்ளன.

பிரித்தானியா இதில் முதன்மை நாடாக இருந்து செயற்பட்டுவருவதாக வெளிநாட்டு ஊடகங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பின்னணியிலேயே கெலும் மக்ரே இலங்கைக்கு எதிரான புதிய ஆவணப் படத்தை உருவாக்கி வருவதாக கூறப்படுகிறது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் நடந்த போர்க்குற்றங்களை வெளிக்காட்டும் இரண்டு முக்கிய ஆவணப்படங்களை மக்ரே உருவாக்கியிருந்தார். இலங்கையின் கொலைக்களம், போர் தவிர்ப்பு வலயம் ஆகிய படங்கள் இலங்கை அரசின் போர் குற்றங்களை வெட்டவெளிச்சத்திற்கு கொண்டு வந்தன.

இதனால் கெலும் மக்ரே மீதும் சனல் 4 தொலைக்காட்சி மீதும் கடும் கோபத்தில்இருக்கும்இலங்கை அரசு கொழும்பில் அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு வந்திருந்த சனல 4 தொலைக்காட்சியினருக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

இலங்கையின் புலனாய்வாளர்கள் தம்மை பின் தொடர்ந்ததாக கெலும் மக்ரே உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் சனல் 4 ஊடகவியலாளர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு சென்ற குடிவரவு அதிகாரிகள் எனக் கூறிக் கொண்ட நபர்கள் அவர்களிடம விசாரணை நடத்தியதாக சனல் 4 தொலைக்காட்சியினர் குறிப் பிட் டிருந் தனர். (செ-11)


## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829 (C-5642)



## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

1. கமநல திணைக்கள விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் – ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப. 1.00 மணிக்கு
2. எஸ்.எல்.ஈ.ஏ.எஸ்.திறந்தபரீட்சை (S.L.E.A.S) - ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மு.ப. 10.00 மணிக்கு
3. திறந்த பல்கலைக்கழக சட்டமாணித்தெரிவு பரீட்சை – ஒவ்வொரு சனிக்கிழமையும் பி.ப. 1.00 மணிக்கு

தொடர்புகளுக்கு : 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கி அருகில்)
(C-5680)


# சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதன்

## அவர்களின் குருபூசை தின விழா அழைப்பு



அன்புடையீர்,

நிகழும் விஜய வருடம் கார்த்திகைத் திங்கள் 21 ஆம் நாள் (07.12.2013) திருவோண நட்சத்திரம் கூடிய சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அத்திபாரமிட்டவரான சேர்.பொன்.இராமநாதன் அவர்களின்

## குருபூசைத் தினமாகும்

இதனையொட்டி அன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அன்று காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளவிலுள்ள சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் சிலைக்கும். பல்கலைக் கழக சபா மண்டபத்திலுள்ள (Board Room) அவரின் உருவப் படத்திற்கும். துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## கலை நிகழ்ச்சி

நாளை (07.12.2013) சனிக்கிழமை 4.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத் துறையினர் மற்றும் நடனத்துறையினர் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இராமநாதன் நுண்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
06.12.2013

இங்ஙனம் :- பரமேஸ்வராக் கல்லூரி, இயக்குநர் சபை,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய, பரிபாலனசபை, இந்து மன்றம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(4676)

ஓம் சிறி சாய்ராம்

# விண்ணக வாழ்வன் ஈ.ராண்டு நினைவின் நினைவஞ்சலி



மண்ணுக்காய் 12.10.1927
விண்ணுக்காய் 29.11.2011
திதி : 06.12.2013

## திருமதி நாகமுத்து கிருஸ்ணர்


சுவாமியீன் நிழலில் ...
சுகம் காணும் எம்
அன்னையை ஈராண்டுப்
பிரிவின் இந் நாளினில் ...
எம் அன்னையை ...
அன்புடன் நினைவு கூருவோம்...
ஓம் சாந்தி, சாந்நி, சாந்தி

மலை வேம்படி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
உறவினர்கள்.

(4664)

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 07 1951

மறைவு 13 06 2013

அமரர்
## சரவணமுத்து பரம்சோதி
(இடைப்பிட்டி - காரைநகர்)


திதி :- சதுர்த்தி

வாழ்வாங்கு வாழ்ந்து
வளம்கண்ட பேராளர்
வையத்து மாந்தரிடை
வள்ளலென திகழ்ந்த மகன்
நல்லவராய், வல்லவராய்
தொல்லுலகில் தொழிலுலகில்
புகழ்வென்ற பரஞ்சோதி
எல்லார்க்கும் வழிகாட்டி ...
எம் வாழ்வுக்கு ஒளியூட்டி
பலவோரும் புகழ்ந்தேற்ற
[illegible] சிறந்த மகன்
இவ்வுலகின் சுமை துறந்து

இறைபணியை தொடர்ந்திடவே
குஞ்சரித்தாய் அடியொற்றி
குவலயத்து வாழ்வகற்றி
வெங்கடேசன் அருள் மழையில்
அமைதி கண்டார். ஓம் சாந்தி ...!
பங்கமிலா பெரும் வாழ்வில்
பணிமுடித்து நிறைவுகண்ட
பரஞ்சோதிப் பெருங்கருணை
பாருள்ளவரை வாழும் ...!
பாருள்ளவரை வாழும் ...!

குடும்பத்தினர்
(வெங்கடேஸ்வரா)
354 /7, பருத்தித்துறை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-5676)

# கண்ணீர் அஞ்சலி



சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர் மற்றும் வட மாகாண சபை உறுப்பினருமான

கௌரவ திரு. அங்கஜனின் அன்பு மாமனார்

## திரு.சிவசுப்ரமணியம் பாஸ்கரன்
(பிரபல வர்த்தகர்)

அன்னாரின் அகால மரணம் குறித்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைந்துள்ளோம். துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் : 18.04.1943
மறைவு : 01.12.2013

அலுவலக நண்பர்கள்,
ஊழியர்கள், ஆதரவாளர்கள்.

(சி-5674)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## புத்திக்கூர்மை

"கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு" என்று ஒரு பெரியவர் புத்தி சொன்னார்.

அதைக் கேட்ட ஒரு சின்னப்பையன், "அது எப்படி பெரியவரே, புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கல்லில் கத்தியைத் தேய்க்கலாம். புத்தியைத் தீட்டு என்றால் தலையைக் கொண்டுபோய் தரையில் தேய்த்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றான்.

பெரியவர் உடனே, 'இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு' என்று உணர்ந்து கொண்டார்.

அதுசரி, அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம்? இது ஒரு முக்கியமான கேள்வி. இதே கேள்வியை சோக்ரடீஸ்சிடம் அவருடைய சிஷ்யன் ஒருத்தன் கேட்டான். சோக்ரடீஸ் நிமிர்ந்து சிஷ்யனைப் பார்த்தார். அதற்குப் பின் சொன்னார்.

"இதற்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முதல் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

'என்ன செய்ய வேண்டும்?என்றுசொல்லுங்கள்' என்றான்.

"அதோ பார்! அங்கே வயதான பெரியவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போ. இங்கிருந்து அருகிலிருக்கும் கிராமத்திற்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும்? என்று அவரிடம் கேட்டுக் கொண்டு வா" என்றார் சோக்ரடீஸ்.

சரி என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவரிடம் போனான் அவன்.

அவரிடம், "பெரியவரே, இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் எடுக்கும்?" என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. இந்த சிஷ்யன் மறுபடியும் இந்தக் கேள்வியைக் கேட்டான். அப்பொழுதும் அவர் பதில் சொல்லவில்லை.

"சரி, பெரியவர் ஒரு மாதிரியாக தெரிகிறார். புத்திசுவாதீனம் இல்லாதவர் போலிருக்கிறது" என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான்.

சிறிது தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டார்.

"நீ இங்கிருந்து பக்கத்திலுள்ள கிராமத்துக்குப் போய்ச் சேர 5 நிமிடமாகும்" என்றார்.

இப்பொழுது சிஷ்யன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். அதன்பின் யோசித்தான். பின் அவரிடமே கேட்டான். "பெரியவரே, இந்தப் பதிலை திரும்பிப் போகவிட்டு அதன்பின் கூப்பிட்டு சொல்கிறீர்களே" என்றான்.

பெரியவர் சிரித்தார். அதற்குப்பின், "ஏனப்பா... நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படி நீ கிராமத்துக்குப் போய்ச்சேரக் கூடிய நேரத்தைச் சொல்ல முடியும்? அதனால்தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து அதன்பின் நேரத்தைச் சொன்னேன்" என்றார். சிஷ்யனால் பதிலெதுவும் சொல்ல முடியவில்லை. திரும்பி சோக்ரடீஸ்சிடம் வந்து நடந்ததைச் சொன்னான்.

"அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்" என்றார் சோக்ரடீஸ். இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு என்று பெரியவர்களெல்லாம் புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அதையெல்லாம் இந்தக் காலத்தில் யார் கேட்கிறார்கள்?

இந்தக்கால ஆசாமி ஒருத்தர் இன்னொருவரைப் பார்த்துக் கேட்டார்.

"ஏங்க? ஒரு விமானம் இங்கிருந்து புறப்பட்டு 2 மணிநேரத்தில் மதுரைக்குப் போய் சேருகிறது. அப்படியானால் என்னுடைய வயதென்ன?" என்றார்.

இது என்ன கேள்வி? இருந்தாலும் இதைக் கேட்டவுடன் அவர் பதில் சொன்னார்.

"அப்படியானால் உங்களுடைய வயது இருபது" என்றார். "எப்படி இவ்வளவு கரெக்டா சொல்கிறீர்கள்?" என்றார் இவர்.

"வேறொன்றுமில்லை. எங்களுடைய பக்கத்து வீட்டில் முழுப் பைத்தியம் இருக்கிறது. அதனுடைய வயது 40." என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# போர் முடிந்துவிட்டது என்பதற்காக இராணுவத்தை கலைக்க முடியாது

### அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

30 ஆண்டுகள் நடைபெற்ற போருக்கு பின்னர் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றி நாட்டில் வாழும் உரிமையை இராணுவத்தினர் உறுதிப்படுத்தியதாகவும் உயிர், உடல், இரத்தத்தை தியாகம் செய்து தாய் நாட்டை காப்பாற்றிக் கொடுத்த அவர்களுக்கு மரியாதை செலுத்துவதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் முடிந்து விட்டது என்பதற்காக இராணுவத்தை கலைத்து விட முடியாது. அவர்களின் தொழிலை பாதுகாக்க வேண்டும். அவர்களின் சேவையை தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பாக பெற் றுக் கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதனை முறியடிக்க புலனாய்வுப் பிரிவு, இராணுவ கட்டமைப்பு என்பன பலப்படுத்தப்பட வேண்டும்.

கடற்படை என்பது போரிடுவதற்கு மட்டுமல்ல. கடற்படையை மறுசீரமைப்பதன் மூலம் அவர்களிடம் இருந்து சேவையைபெற்றுக்கொள்ள முடியும். அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்லும் நபர்களை தடுப்பதில் அவர்கள் பங்களிப்பு வழங்கி வருகின்றனர்.

கடல் கொள்ளையர்கள் தொடர்பான பிரச்சினையில் கடற்படையினர் சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளனர். இலங்கை இராணுவத்தை சேர்ந்த பலர் ஐ.நா அமைதி காக்கும் படையில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். இதன் மூலம் இலங்கை அந்நிய செலாவணியை ஈட்ட முடிந்துள்ளது.

அத்துடன் சுற்றுலாத்துறையிலும் உள்நாட்டு விமான சேவையிலும் விமானப்படையினர் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர் என்றார். (அ)

# வடிவமைப்பு உற்பத்தி தொடர்பான பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வடிவமைப்பு நிலையத்தினால் அலங்கார ஆபரணங்கள் வடிவமைப்பு, உற்பத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறையானது எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் யாழ். பொது நூலக மண்டபத்தில் துறைசார் தேர்ச்சி பெற்ற வளவாளரினால் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறையில் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ள முடிவதுடன் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஆர்வமுள்ளவர்கள், பாடசாலையில் இருந்து விலகியோர் விரும்பத்தக்கது.

இப்பயிற்சிப்பட்டறைக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமைக்கு முன்னர் பிரதிப்பணிப்பாளர், கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களை 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என பிரதிப்பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (அ)

# வாழும் கலைப்பயிற்சி

(தும்பளை)

பருத்தித்துறை ஞானாலயத்தில் சுதர்ஷன கிரியா வாழும் கலைப்பயிற்சி தொடர்பான அறிமுக உரை நாளை சனிக்கிழமை பிற்பகல் 6 மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறவுள்ளது.

அறிமுக உரையை குருஜீஜீ, வாழும் கலை அமைப்பை சேர்ந்த கணேஸ்ஜீ, மாதவன்ஜீ ஆகியோர் நடத்தவுள்ளனர். (அ-9-19)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 10 - 20 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 30 | 20 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 20 | 15 | 50 |
| கரட் | 50 | 40 | 60 |
| பூசணி | 20 | 20 | 50 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 - 220 | 230 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 100 | 160 | 120 |
| பாகற்காய் | 50 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 20 | 40 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 80 |
| கறிமிளகாய் | 90 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 50 | 120 |
| போஞ்சி | 120 | 90 | 140 |
| கீரை - 1 பிடி | 10 - 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 - 120 | 80 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 35 - 45 |
| இராசவள்ளி | 200 - 250 | 210 | 200 |

# இராசி பலன்

*06.12.2013*
*(கார்த்திகை 20 வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.09 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 9.36 மணிவரை*
*உத்தராடம் பின்னிரவு 12.15 மணிவரை*
*இராகுகாலம் 10.47-12.17 மணிவரை*
*சுபநேரம் 6.17-7.47 மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

**மேடம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.

**இடபம்** சுணங்கிய கா்ரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அலைச்சல் குறைந்து ஆதாயம் பெருகும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்,பிரியமான சிலரோடு ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும்.

**மிதுனம்** வரவைவிட செலவுகள் அதிகமாகும், காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், வேலைச் சுமை கூடும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டி வரலாம்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**சிங்கம்** போட்டிகள் மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**கன்னி** மைத்துனர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், பெரியவர்களின் தொடர்புகளால் நன்மையுண்டு.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள், ஊக்கத்தோடும் உற்சாக தோடும் பணிபுரிவீர்கள். வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள் சுபசெலவுகள் கூடும்.

**விருச்சிகம்** உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய அனுபவம் ஏற்படலாம், அந்நியர் உதவியுண்டு போசன சுகமுண்டு.

**தனுசு** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நீண்ட நாள் ஆசையொன்று நிறைவேறும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சொந்தங்களால் நன்மையுண்டு

**மகரம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம், கற்பனை மிகுதியான நாள், வருமானத்தை அதிகரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சஞ்சலங்கள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், நட்பு வட்டம் விரிவடையும், பணப்புழக்கம் அதிகரிக்கும்,குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்,போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

## அதிபர் இரத்தினம் பாலகுமார் (SLPS-1) அவர்களின்

# மணிவிழா—06.12.2013

### ஆற்றல் மிக்க அதிபர்



கல்லூரி அன்னையின் வளர்ச்சியையே கண்ணும் கருத்துமாய்க்கொண்டு உழைத்தவர் பாலகுமார் அவர்கள். ஆசான் பணியாகத் தொடங்கிய இவரது கல்விச்சேவை இன்று அதிபர் பதவியுடன் ஓய்வுக்கு வருகிறது. அன்பு, அறிவு, பண்பு, செயற்றிறன் கொண்டு விளங்கிய இவர் மாணவர்களைத் தம் வழிநடத்த அரும்பாடுபட்டவர். கல்லூரியின் வளர்ச்சி பல்வேறு அபிவிருத்திப்பாதையில் செல்ல வழிநடத்தி வழிகாட்டியாக விளங்கியவர். எண்ணிய பணிகளைத் திண்ணியமாக முடிக்கும் ஆற்றல்மிக்க இவர் ஐந்தாண்டு காலம் இக்கல்லூரியில் அதிபராக சேவையாற்றியுள்ளார்.

காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தில் மாணப்பெரிது

கல்லூரிக்கேற்றவகையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்ட அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் மேலும் சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன்.

கௌரவ த.குருகுலராசா
வடமாகாண கல்வி அமைச்சர்




### அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



யா/செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபர் திரு. ஆர். பாலகுமார் அவர்களின் மணிவிழாவில் அவர் செய்த பணிகளை நினைவுகூர்வது எமது தலையாய கடமையாகும். கல்லூரியை கல்வி வளர்ச்சிப் பாதையில் சரியாக வழிநடத்திச் சென்று உயர்ந்து நிற்கும் அதிபர் அவர்கள் ஒரு நேரம்கூட சோர்ந்திருப்பதைக் காணமுடியாது.

மாணவர்கள் நல்ல ஆளுமையுள்ள, இயற்கையில் ஈர்ப்புக் கொள்ளக்கூடியவர்களாக மாற்றியமைக்க அதிபர் அவர்களின் பங்கு உயர்ந்து நிற்கின்றது.

தன்னலம் பாராது பொதுநோக்குக் கொண்ட அதிபர் அவர்களின் காலத்தில் கல்லூரியின் பாரிய வளர்ச்சி கண்டு வியந்தவர்களில் நானும் ஒருவன்.

இவரின் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றேன்.

பொ.ஐங்கரநேசன்
வடக்கு மாகாண விவசாய அமைச்சர்

### கடமையில் சிறந்தவர்



ஆசிரியர் பணியில் 1979 இல் இணைந்து கொண்ட இவர் 1991 இல் அதிபராகப் பதவியுயர்வு பெற்று பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி பெற்ற அனுபவத்துடன் 2008 இப்பாடசாலையில் அதிபராகக் கடமையேற்று தனது கடமைகளைச் சிறப்பாக ஆற்றி பாடசாலையின் பௌதீக வளத்தை உச்ச அளவில் முன்னேற்றியதுடன் கல்வித் தரத்தை உயர்த்துவதிலும் அயராது உழைத்த அதிபர் என்ற வகையில் இவர் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

திரு.சி.சத்தியசீலன்
செயலாளர், வடமாகாணக் கல்வி அமைச்சு

### ஒளியாய் மிளிரச் செய்தவர்



யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. ஆர். பாலகுமார் அவர்களின் மணி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு கல்லூரி சிறந்த பெறுபேறுகளைப் பெற அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் ஆர். பாலகுமார் அவர்கள். பல இன்னல்களுக்கு மத்தியில் கல்லூரியை சரியான பாதையில் வழிநடத்தி ஒளியாய் மிளிரச் செய்து இன்று மணிவிழாக் கண்டு ஓய்வுபெறும் அதிபர் தனது ஓய்வுக்காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்தி வணங்குகின்றேன்.

சி.சிறிதரன்
பாராளுமன்ற உறுப்பினர், கிளிநொச்சி.

### அக்கறையுடன் பணியாற்றிய செம்மல்



செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபர் இ. பாலகுமார் அவர்கள் தமது 60 ஆவது வயதைப்பூர்த்தி செய்து சிறப்பு வாய்ந்த கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுமார் 5 வருடங்களுக்கு மேலாக இந்தக் கல்லூரியின் அதிபராக இருந்து கல்லூரியினதும் மாணவர்களினதும் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் அரும் பணியாற்றியவர்.

இவரது பதவிக் காலத்தில் கல்லூரி மேம்பட்டமைக்கு கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஏழு மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றமை ஒரு சான்றாகும். இவரது ஓய்வுக்காலத்தில் நிறைந்த வாழ்வு வாழவும் சமூக சேவைகளில் மக்கள் சேவையாற்றி பெருமையடையவும் வாழ்த்துகிறேன்.

கௌரவ சீ.வீ.கே.சிவஞானம்,
அவைத்தலைவர், வடக்கு மாகாண சபை.

### வாழ்த்துகின்றோம்...



செங்குந்தா அன்னையின் வளர்ச்சி கண்டு இன்புற்றிருக்கும் இவ் வேளையில் அகவை அறுபதுகண்டு அதை வளர்த்து விட்டவன் ஓய்வுபெறுவதையிட்டு மனம் வேதனை அடையாமல் இல்லை.

கல்வி , விளையாட்டு, கலை, நிர்வாகம் பாடசாலை ஒருங்கமைப்பு யாவற்றிலும் கல்லூரியை கடந்த சில தசாப்தங்களுக்கு முன்பிருந்த நிலைக்கு ஆளாக்கி வைத்தவர் எங்கள் அதிபர். ஆசிரியர்கள், கல்வித் திணைக்களம் , பழைய மாணவர்கள் ஆகிய எல்லா வளங்களையும் சரியான வழிகளில் பயன்படுத்தி கல்லூரியை உயர்ச்சிபெற வைத்துவிட்டீர்கள்.

இந்த மனநிறைவோடு உங்கள் ஓய்வுக் காலத்தில் மனைவி, பிள்ளைகளுடன் இன்புற்றிருக்க செங்குந்த இந்துக் கல்லூரியின் அபிவிருத்திக் குழு சார்பாக வாழ்த்துகிறோம்.

லயன் சி. இலட்சுமிகாந்தன்.
(ஓய்வு நிலை கிராம அலுவலர்) , செயலாளர் ,
அபிவிருத்திக்குழு, செங்குந்த இந்துக்கல்லூரி.

### பாடசாலை சிறக்க சேவையாற்றியவர்



இ. பாலகுமார் அவர்கள் கல்விப் புலத்திலே ஆசானாக, பகுதித் தலைவராக, உப அதிபராக, அதிபராக, படிப்படியாக பதவியுயர்வு கண்டவர். கடின் முயற்சியும் ஊக்கமும் அவரைப் பதவியுயர்த்தியது. நன்னூலார் கண்ட மூவகை மாணவர்களுக்கும் உகந்தவொரு ஆசிரியராக அவர் பத்தாண்டு காலம் பணிபுரிந்தார். ஆசிரிய சேவையில் உன்னத பணியாற்றியமையால் அவர் அதிபராக செங்குந்த இந்துக் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் சிறப்புடன் சேவையாற்றி அறுபது அகவை கண்டு சேவையினின்று நீங்குகிறார். அவரது ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

திரு. வ. செல்வராசா
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

### பாடசாலையின் உயர்நிலைக்கு உழைத்தவர்



யா/செங்குந்த இந்துக் கல்லூரி சிறப்புடன் இயங்கி வந்த ஒரு பாடசாலையாகும். இடைப்பட்ட காலத்தில் பாடசாலையினது செயற்பாடுகளில் தளர்வுகண்டபோது அதிபராகக் கடமையேற்று பாடசாலையை எழுச்சிப்போக்கில் கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும்.

1979 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பல்வேறு வகிபாகங்களை இவர் வகித்துள்ளார்.

03.01.2008 இல் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையேற்றதன் பின்பு தனது கடமையைச் சிறப்பாக ஆற்றி பாடசாலையை உயர்வு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

### உளமார வாழ்த்துகின்றேன்



எமது சங்கத் தலைவரும் பழைய மாணவரும் அதிபருமாகிய திரு.பாலகுமார் அவர்கள் நாம் கேட்டதற்கமைய கல்லூரிப் பொறுப்பை ஏற்று மீண்டும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர். பாட, இணைப்பாட விதானங்களிலும் பௌதீக வள அபிவிருத்தியிலும் எம்மை இணைத்து கல்லூரியை உயர்வுறச் செய்த பெருமைக்குரியவர்.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தன்னை அர்ப்பணித்து கல்லூரியை வளர்த்த பெருமைக்குரியவர். கல்லூரியின் பழைய மாணவனான இவர் கல்லூரி மீது மிகுந்த பற்றுடையவர் . அன்பும் அமைதியும் கொண்ட இவர் கல்லூரி வரலாற்றில் தனது பெயரையும் தடம் பதித்தவர். இவர் பணியை நயந்து ஓய்வு சிறப்புற மணிவிழாநாயகனை வாழ்த்துகிறேன்.

செ.குகதாசன்,
செயலாளர், ப.மா.சங்கம்,
ஓய்வு நிலை வலி.கிழக்கு பிரதேச சபை.

### முகாமைத்துவ மதிநுட்பம் மிக்கவர்



பாலகுமார் அவர்கள் செங்குந்த இந்துக் கல்லூரியின் மைந்தர் என்பதனாலேயே அப்பாடசாலை இன்று கல்வியில் சிறந்து விளங்குகின்றது. பாடவிதானம், இணைப் பாடவிதானம் என்பவற்றுடன் மட்டுமன்றி பௌதீக வளத்திலும் சிறப்புடைய பாடசாலை என்பதில் மகிழ்வடைகிறேன். நகர்ப்புறப் பாடசாலையின் அருகில் அமைந்திருந்தாலும் இப்பாடசாலையின் பெறுபேறு சோர்வடையவில்லை.

அறுபது வயதைப் பூர்த்தி செய்யும் வேளையிலே இவரின் சேவையின் திறமைகண்டு வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

கோ.வரதராஜமூர்த்தி
பி.க.ப (கல்வி நிர்வாகம்), யாழ்ப்பாணம்

### செயல் வீரன்



அமைதியான நிலையில் சிறப்புற நிர்வாகத்தை மேற்கொண்டு பௌதீக வளங்களை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றதுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைப் பாடவிதான செயற்பாடுகளும் உயர்ச்சியடையச் செய்வதற்காக அரும்பாடுபட்டவர் எமது அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. ச. உமாசுதன்,
தலைவர், நல்லுறவு மன்றம்,
செங்குந்த இந்துக் கல்லூரி


விளம்பர அனுசரணை:
வைத்திய நிபுணர்
எஸ்.ஜெயரட்ணம்
பழைய மாணவன்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.


### கல்லூரித்தாயின் தவப்புதல்வனே வாழி



2008 இல் கல்லூரியின் இடர்நீக்கி உயர்த்திட பழைய மாணவர்கள் கேட்டதற்கமைய அதிபர் பதவியை அலங்கரித்து மீண்டும் புத்துயிர் பெறச் செய்த புதல்வனே! எம் அதிபர். அல்லும் பகலும் அயராது கல்லூரி வளர்ச்சிக்காய் தன்னை அர்ப்பணித்து வளம்பெருக்கி கல்வியிலும் தேசிய மட்டம்வரை சாதனை புரியவைத்து அகவை அறுபதில் மணிவிழாக் காணும் எம் அதிபர் சேவையை நயந்து வாழ்த்துகின்றேன். வாழி பல்லாண்டு.

எஸ்.பத்மராஜா
உப அதிபர், யா/செங்குந்த இந்து கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் விழிப்புணர்வு குறித்து சைக்கிள் ஊர்வலம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தமிழ் பிரதேசங்கள் உட்பட புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பாக தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் மாபெரும் மிதிவண்டி ஊர்வலம் ஒன்று நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கண்டி திரித்துவக் கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கண்டி புற்றுநோயாளர் சங்கத்திற்கு நிதியுதவி சேகரிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூர மிதிவண்டி ஓட்டம் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய இந்த மிதிவண்டி ஓட்டப் போட்டி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நாட்டிலுள்ள 37 சாரணர் வலையங்களும் பங்கேற்கின்றன.

நாளை சனிக்கிழமை கண்டி திரித்துவக் கல்லூரி முன் இருந்து ஆரம்பமாகும் மிதிவண்டி ஊர்வலம் எதிர்வரும் 18 ஆம் திகதி அதே இடத்தில் நிறைவடையும்.

இவ் ஊர்வலம் கொழும்பு, புத்தளம், மன்னார், காங்கேசன்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பொத்துவில், அம்பாந்தோட்டை, காலி, கொழும்பு என பயணித்து இறுதியாக 18 ஆம் திகதி கண்டியை சென்றடையும்.

தொண்டர்கள் குழு பயணம் செய்து புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் நிதி சேகரிப்புப் பணியிலும் ஈடுபடும்.

இவ் ஊர்வலத்தில் இடைக்கிடை தொண்டர் அடிப்படையில் அவ்வப் பிரதேச சாரணர்கள் இணைந்து கொள்ளும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

எட்டு மாடிகளைக் கொண்ட கண்டி புற்றுநோய் வைத்தியசாலை கட்டட நிதிக்காகவே இது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விபரங்களுக்கு 077 6540909 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (அ-2)

# நான்கு துறைமுகங்களால் இலங்கைக்கு பாரிய சவால்

(கொழும்பு)

இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவற்றின் துறைமுகங்கள் இலங்கைக்கு அச்சுறுத்தலாகியுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல கேள்விக்கான விவாதத்தில் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்கவின் கேள்விக்கு பதிலளித்த துறைமுகங்கள் செயற்றிட்ட அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன துறைமுகங்கள் தொடர்பாக பல விபரங்களை வெளிப்படுத்தினார்.

இந்திய உப கண்டத்திலிருந்து வரும் கப்பல் மாற்றியேற்றும் சரக்குகளை ஓமானிலுள்ள சலலா துறைமுகம் கவர்ந்து வருகின்றது. இந்திய கிழக்குக்கரை சரக்கு, பங்களாதேஷ் மற்றும் மியன்மார் சரக்குகளை கவரும் சிங்கப்பூர் துறைமுகமும் இலங்கைக்கு சவாலாகவுள்ளது.

ஓமான் துறைமுகங்களான ஜெபெல் அலி, ஹோபக்கன் துறை முகங்களும் இலங்கைக்கு போட்டியாகவுள்ளன.

இந்தியாவிலுள்ள கொச்சின், சென்னை, ஜவஹர்லால் நேரு துறைமுகங்கள் மேலும் மேலும் கப்பல் நிறுவனங்களை ஈர்த்து வருகின்றன.

இந்த போட்டிகளை சமாளிக்க இலங்கை துறைமுகங்களையும் அது தொடர்பான உட்கட்டமைப்புகளையும் விஸ்தரித்து வருகின்றது. இதனால ஆகவும் பெரிய கப்பல்களையும் இங்கு கொண்டு வரமுடியும். இறங்கு துறைகளை நடத்துபவர்களுடனும் கப்பல் கம்பனிகளுடனும் பங்குதாரர்களாகி வருகிறோம் என அமைச்சர் கூறினார். (அ-2)

# இராணுவ தமிழ் பெண்கள் தென்பகுதிக்கு சுற்றுலா

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட 45 தமிழ்ப் பெண்கள் தென்பகுதிக்கு சுற்றுலா விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தில் இணைத்து கொள்ளப்பட்ட தமிழ்ப் பெண்களின் தெற்கிற்கான இந்த பயணத்தை வன்னி இராணுவத் தலைமையகம் ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான நட்புறவு தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த பெண்களை தென்பகுதிக்கு சுற்றுலாவுக்காக அனுப்பி வைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இந்த பெண்கள் தமது வாழ்நாளில் கண்டிராத தென்பகுதி நகரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கதிர்காமம், திஸ்ஸமஹாராம, மகாகம்புற சர்வதேச மாநாட்டு மண்டபம், மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் உட்பட முக்கிய இடங்களுக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள நல்லிணக்க செயற்பாடுகளின் ஒரு அங்கமாக இராணுவத்தில் இணைந்துள்ள தமிழ் பெண்களின இந்த தெற்கு விஜயம் அமைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் கூறியுள்ளது. (அ-2)

# சாரதியின்றி பயணித்த புகையிரதம்

புகையிரதச் சாரதி இல்லாமல் புகையிரத இன்ஜின் ஒன்று புறப்பட்டுச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தெமட்டகொடயில் புகையிரதங்கள் நிறுத்திவைக்கப்படும் இடத்திலிருந்து நேற்று அதிகாலை 1.45 மணியளவில் புகையிரத சாரதி இல்லாது மேற்படி இன்ஜின் தானாகவே இயங்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.

இவ்வாறு புறப்பட்டுச் சென்றுள்ள மேற்படி புகையிரத இன்ஜின் கல்கிசைக்கும் இரத்மலானைக்கும் இடை யில் நிறுத்தப்பட்டு ள்ளதாக புகையிரத அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு புகையிரத இன்ஜின் புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில் விபத்துக்கள் எதுவும் சம்பவிக்க வில்லை எனவும் அவர்கள் கூறினர்.

இந்த இன்ஜின் தற்போது இரத்மலானை புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த இன்ஜின் சாரதியும் அவரது உதவியாளரும் உடனடியாகப் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு புகையிரத திணைக்களத்தினால் தொழில்நுட்பக் குழுவைச் சேர்ந்த மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ-2)


பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (பூ்ஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5541)



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

# நன்றி நவிலல்



08.11.2013 வெள்ளிக்கிழமை காலமான Dr. திருமதி ருக்மணி உதயகுமார் அவர்களின் பூதவுடலை பெறுவதற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சகல ஊழியர்கள் அனைவருக்கும் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் காவல் உத்தியோகத்தர்கள், மல்லாகம் நீதிமன்றத்திற்கும் மரண விடயம் அறிந்தவுடன் வந்து சட்ட ரீதியான உதவிகள் அனைத்தையும் செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கட்கும் அன்னாரின் இறுதி கிரியையில் பங்கு பற்றி உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்கள், ஏனையோர் அனைவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து மின்னஞ்சல் மூலம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த சகலருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேற்குறிப்பிட்ட விடயத்தில் எவருக்கேனும் நன்றி சொல்ல மறந்திருப்பின் இந்நன்றியை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அன்புடையீர்,

கடந்த 08.11.2013 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம்பேறடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் Dr. (திருமதி) ருக்மணி உதயகுமார் (MBBS) அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.12.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கணவர் V.உதயகுமார்,
மகன் U.அர்ச்சனா

அர்ச்சனா கிளினிக்,
மயிலணி, சுன்னாகம்.

குறிப்பு:- அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு எமது தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காவிடின் இத்தவறினை மன்னித்துக் கொண்டு எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் V.உதயகுமார், மகன் U.அர்ச்சனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச சபைக்கூட்டம் நேற்று முன்தினம் தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் இடம்பெற்றது.


இதன்போது சபை உறுப்பினர்கள் மத்தியில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

ஆயினும் சபை உறுப்பினர் க.பரஞ்சோதி கடந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் வேலைத் திட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்படவில்லையெனவும் சமூக ரீதியாக பாகுபாடு காட்டப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று சபை உறுப்பினர் பால்ராஜ், திருத்தப்பட வேண்டிய பல வீதிகள் உள்ள நிலையிலும் தவிசாளர் தன்னிச்சையாக தமக்கு தேவையான பகுதிகளை புனரமைப்புச் செய்து வருவதாக குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறாக பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் தவிசாளர் பொ.வியாகேசு, தான் சபை நிதியிலிருந்து நேர்மையாகவே அபிவிருத்தி பணியை மேற்கொள்வதாக தெரிவித்தார்.


சபையிலிருந்து இருதடவைகள் தவிசாளர் வெளியேறிய போதிலும் இறுதியில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-9-24)



நன்றி:- மிரர்

# கலாசார சீரழிப்பில் ஈடுபடுவோர் விரைவில் இனங்காணப்படுவர்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



(சாவகச்சேரி)

**எம் பிரதேசங்களினுள் புகுந்துள்ள கல்வி வாசனையை குறைவாகப் பெற்றவர்கள் இளைஞர்களின் பொலிவை நிலைகுலைக்க போதைப் பொருட்களை பயன்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளினால் எம்முள் இயற்கையாகவே ஊறியுள்ள கல்வியின் நாட்டத்தை மழுங்கடிக்க திட்டமிட்டு செயற்படுகிறார்களோ? என சந்தேகம் எழும்புவதாக வடமாகாணசபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

மாணவச் சமுதாயம் கலாசாரம்,பண்பாடு, நாகரிகம் என்ற சொற்களால் உணர்த்தப்பட்டு வரும் சமூக நிலைப்பாடுகளையும் மனதில் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட வடமாகாண முதலமைச்சர் சார்பாக அவரது உரையை வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் சமர்ப்பித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. அவைதான் சேமிக்கும் சிந்தனையும் சிக்கன குணமும். கல்வி மேல் நாட்டமும் இன்றைய சூழல் எமது மாணவ, மாணவியருக்கு இந்தக் குணாம்சங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகத் தெரியவில்லை. ஊதாரித்தனமும் ஊர்சுற்றும் குணமும் கல்வியைப் புறக்கணிக்கும் ஒரு பாங்கும் அவர்களைப் பீடித்து வருகின்றனவோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இவற்றை வெளியில் இருந்து இங்கு வந்து நிலைபெற்றிருக்கும் சில சக்திகள் எமது மாணவ சமுதாயத்தினரிடையே பரப்பி வருகின்றார்களோ என்று எண்ண வேண்டியுள்ளது. எமது மாணவ சமுதாயம் தமது உரித்துக்கள் பற்றியும் சுதந்திரம் பற்றியும் தனித்துவம் பற்றியும் சிந்திக்காது தடுப்பதனால் இப்பேர்ப்பட்ட எதிர்மறைக் குணாங்களை வளரவிடுவது இங்கு நிலைபெற்றிருக்கும் சக்திகளுக்கே நன்மையைத் தரும். இன்று இந்திரியசுகத்தை மேம்படுத்தும் விதத்தில் காரியங்கள் நடைபெற்றுவர்களைக் கணிகைகளாக மாற்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாடசாலைகளில், கல்லூரிகளில் ஒழுக்கம் ஒதுக்கப்பட ஏதுவான காரணிகளை ஆராய்ந்தால் இன்றைய சூழலின் தாக்கம் மிகப் பெரிய காரணியாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இருக்கத் தேவையில்லை.

மாணவர்களே! ஒன்றை மட்டும் மனதில் நிலை நிறுத்துங்கள். இன்று வெளிநாடுகளில் எம்து உறவுகள் நல்ல பெரிய வேலைகளில் கடமையாற்றுகின்றனர். அது எப்படி? அவர்கள் தங்கள் இளமைக் காலத்தில் கல்வி மீது காட்டிய சிரத்தையே அதற்குக் காரணம். இன்று நீங்கள் அதே அளவு சிரத்தையை இப்பொழுதிருந்தே காட்டினால் தான் எமது வருங்காலம் மலரும். கட்டப்பட்டிருக்கும் எம் மக்கள் கட்டவிழ்ந்து காட்சி தருவார்கள். எமது மக்கள் விடிவு பெறுவார்கள்.

ஓய்வு பெற்று மகிழ்வுடன் அமைதி வாழ்க்கை வாழ்ந்து வந்த முதுமை பெற்ற என்னை அரசியல்வாதிகளும் தமிழ் ஆர்வலர்களும் தேடி வந்து அரசியலினுள் இழுத்து விட்டார்கள் என்றால் அதிலிருந்து என்ன தெரிகிறது? எமது மக்களிடையே ஏதோ குறைபாடு நிலைபெற்றுள்ளது என்பதுதானே! எம்முள் அரசியலுக்கான கடமைகளை ஏற்று முன்செல்லப் போதியவர்கள் இல்லை. இது எதனால் ஏற்பட்டது? போரின் போது எமது மக்களின் கல்வி தடைப்பட்டது. கல்வியில் ஏற்றமுடையோர் ஏதிலர் ஆக்கப்பட்டு எமனிடம் கையளிக்கப்பட்டார்கள். இவையே முக்கிய காரணங்கள். இனியும் அந்த நிலையை நாங்கள் நீடிக்கவிடத் தேவையில்லை.

எமது மாணவ சமுதாயம் கல்வியில் சிரத்தை காட்டுவதைத் தமது தலையாய கடமையாக ஏற்றுக் கொள்ளவேண்டும். மீண்டும் எமது வட மாகாண தமிழ் பேசும் மக்கள் முழு இலங்கை யிலுமே அதிகூடிய புள்ளிகளை பெறுபவர்க ளாக மாறவேண்டும். தற்கால இந்திரிய சுகங் களில் எம்மை மயங்கி விழ வைக்கும் நபர் களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதி ராக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

விரைவில் எமது பிராந்தியம், வெளியில் இருந்து வந்து எம் மாணவ சமுதாயத்தை ஊமத்தர்களாக்க விழைந்த சக்திகளை அடையாளம் கண்டு வெளியேற்றும் என்றார். (அ-9-29)

# கௌரவிப்பும் கலைநிகழ்வும்

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் புரட்சி முன்பள்ளியில் விலகிச்செல்லும் மாணவர்கள் கௌரவிப்பும் கலை நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ந.ராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன்,எஸ்.சிவயோகன், கே.சர்வேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான மதியழகன்,தவயோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, வட மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், கற்கோவளம் கிராம சேவையாளர் எஸ்.கௌதமன், யா/நாகர் கோவில் மெ.மி.த.க.பாடசாலை அதிபர் எஸ்.செல்வச்சந்திரன், கிறிஸ்தவ வாலிபர் சங்கத் தலைவர் வி.வேதாபரணம் ஆகியோரும் கலந்து கொள்வர். (அ-9-19)

# வலி.வடக்கு வீடழிப்பு தொடர்பில் கண்டன தீர்மானம் கொண்டுவரப்படும்

## மாகாண சபை உறுப்பினர் கஜதீபன்

வலி.வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடழிப்பு மற்றும் மதத் தலங்கள் இடித்தழிப்புக்கு எதிராக வடக்கு மாகாண சபையின் மூன்றாவது அமர்வில் கண்டனத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படும் என ஆளும் கட்சி உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இந்து ஆலயங்களை மையப்படுத்தி இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் அற்றுப் போகவும் ஆலயங்களின் புனிதத் தன்மையை பாதுகாக்கும் நோக்குடனும் சிவ ஆராதனையும் பிரார்த்தனை நிகழ்வும் நேற்றுமுன்தினம் சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் கோவிலில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மாகாண சபை உறுப்பினரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட பல காலமாக 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் வாழ்விடங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுடைய வழிபாட்டு இடங்கள், பல பாடசாலைகள் குறிப்பாக நடேஸ்வரா கல்லூரி போன்ற பாடசாலைகள் அதாவது முதல் நாள் இருந்த பாடசாலைகள் மறுநாள் தரைமட்டமாக மாற்றப்பட்டு புழுதியாக்கப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன.

இதனைவிட உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கக்கூடிய அத்தனை ஆலயங்களும் இடித்து அழிக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் ஒவ்வொருவரும் தமது சக்திக்குட்பட்ட வகையில் எதிர்ப்பு போராட்டங்களை நடத்திக் கொண்டுவருகின்றனர்.

இந்த நிகழ்வுகள் நிச்சயமாக அனைவருடைய மனங்களிலும் எந்தக் கல்நெஞ்சத்தையும் உருக்கக்கூடிய வகையில் இடம்பெறும் நிகழ்வாக இதைப்பார்க்கின்றோம். எந்தவிதமான வன்முறைகளும் இன்றி ஒரு புனிதமான இடத்தில் தமது பிரார்த்னையை முன்னெடுத்திருக்கின்றனர்.


சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் சற்றுச் சிந்தித்து எமது நிலைப்பாட்டை புரிந்து கொண்டு திருத்திக் கொள்ளவேண்டும் என நாங்கள் மன்றாட்டமாக கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் வலிகாமம் வடக்கில் இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் 6 ஆயிரத்து 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணியிலிருந்து வீடுகள் இடித்து அழிக்கப்படுகின்றமை, இந்து ஆலயங்கள் உட்பட மதத்தலங்கள் இடித்து அழிக்கப்படுகின்றமை, இதனைவிட வரலாற்று சிறப்பு மிக்க பாடசாலைகள் மற்றும் கட்டடங்கள் இடித்தழிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாகாணசபையின் அடுத்த அமர்வில் கண்டனத் தீர்மானம் ஒன்று என்னால் கொண்டு வரப்படும்.

அந்தத் தீர்மானத்திற்கான முன்மொழிவை ஏற்கனவே அவைத்தலைவரிடம் சமர்ப்பித்து விட்டேன். அத்தோடு மாகாணசபை அமர்வின் போது இந்தத்தீர்மானம் தொடர்பில் ஏனைய உறுப்பினர்களின் கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கைவிடவுள்ளேன். இதேவேளை, இந்தத்தீர்மானம் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாணசபையின் மூன்றாவது அமர்வில் நிறைவேற்றப்படவுள்ளதோடு இது தொடர்பில் மக்களுக்கும் விளக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை அவயவம் பொருத்தல்



(கிளிநொச்சி)

மேத்தா பவுண்டேசன் நிறுவனத்தினர் கிளிநொச்சியிலுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை அவயவம் பொருத்தும் நிகழ்வை இம் மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான தேவை உள்ளவர்களை உடனடியாக பிரதேச செயலகங்களில் உள்ள சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (ம-254)

## கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் நோயாளிகளுக்கு பயணக்கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பாரிய நோய்ச் சிகிச்சைக்காக அரச மருத்துவ மனைக்கு தூர இடங்களுக்கு செல்லும் வறிய நிலையிலுள்ள 8 பேருக்கு பயணச் செலவுக் கொடுப்பனவாக தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்க நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் பேரில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் நிதியை வழங்கியுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி கிராம அலுவலர்களின் ஒத்துழைப்புடன் தகுதிவாய்ந்த பயனாளிகளை தெரிவு செய்தார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கண்டி போன்ற வைத்தியசாலைகளுக்கு செல்லும் வறியவர்கள் இவ் உதவித் தொகையைப் பெற முடியும்.

வைத்தியசாலையில் கிளினிக்கு செல்லும் குறிப்பு கொப்பியின் பிரதியுடன் உதவிப் பணப் படிவத்தினை பூரணப்படுத்தி கிராம சேவகரின் சிபார்சு பெற்று தமது நிலையை விளக்கும் கோரிக்கைக் கடிதத்தில் கிராம சேவகரின் சிபாரிசு பெற்று உதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கிளிநொச்சியில் தூர கிராமங்களிலிருந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு வருபவர்களும் இவ் உதவிப் பணத்திற்கு விண்ணப்பிக்க முடியும். (ம-254)

## முல்லைத்தீவில் திருட்டு



முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரின் வீட்டில் கடந்த 3 ஆம் திகதி இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கணுக்கேணியில் வாடகை வீடொன்றில் வசித்து வரும் குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர் முள்ளியவளை ஹிஜ்ராபுரத்தில் புதிதாக வீடொன்றை நிர்மாணித்து வருகின்றார்.

இந்நிலையில் புதிதாக நிர்மாணித்துக் கொண்டிருக்கும் வீட்டிலேயே 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுப்பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள்; ஐ.நா. பிரதிநிதியிடம் பெற்றோர் கோரிக்கை

(குருமன்காடு)

**தங்கள் பிள்ளைகளை ஒப்படைத்தமைக்கு தாமே சாட்சியங்கள் எனவும் எப்படியாவது தம் பிள்ளைகளை தம்மிடம் சேர்ப்பிக்க உதவி செய்யுங்கள் என்றும் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கலாநிதி சலோகா பெயானியிடம் கதறியது நெஞ்சை உருக்கியது என வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் ஐ.நா.விசேட பிரதிநிதியுடனான சந்திப்பு முள்ளிவாய்க்கால் முன்பள்ளியில் இடம் பெற்றது. இதன்போதே அவரிடம் முல்லைத்தீவு மக்கள் தம் சோகங்களை எடுத்துக் கூறியுள்ளனர்.

அத்துடன் வடமாகாணசபை உறுப்பினர்கள் து.ரவிகரன், அன்ரனி ஜெகநாதன் ஆகியோர் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டு தமிழ்மக்களின் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் அவரிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

அவர் மேலும் கூறுகையில், மணலாறு உள்ளடலங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து நில அபகரிப்புக்கள் பற்றி நான் நேரடியாக பெற்ற ஆதாரங்களை முன்னிறுத்தி அவரிடம் தெளிவுபடுத்தினோம்.

வலி.வடக்கு மக்களின் சோகநிலை பற்றிக் கூறினேன். வடக்கில் இராணுவத்தின ரின் பிரசன்னத்தால் எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. காணி அதிகாரத்தை மறுத்து மிகவேகமாக எங்கள் பூர்வீக பிரதேசங்களில் இடம்பெற்று வரும் நில வள அபகரிப்பை பற்றி தெளிவாக எடுத்துரைத்தோம்.



முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதியுடனான இச்சந்திப்பை மக்கள் பல இடையூறுகளின் மத்தியிலும் வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

வட்டுவாகலில் தாம் ஒப்படைத்த பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் என பெற்றோர் கதறியது நெஞ்சை உருக்குவதாக இருந்தது. அவர்களிடம் குறித்த பிரதிநிதி தொடர்ச்சியாக கேள்விகளைக்கேட்டுவிபரங்களைச்சேகரித்தார். அவருடைய கேள்விகளுக்கு பதிலளித்து அப்பெற்றோர் நேரடி சாட்சியங்களாக மாறி நின்றது அங்கு நின்றோரிடம் கண்ணீரை வரவழைத்தது.

மேலும் கொக்கிளாயை சேர்ந்த பொது மகன் ஒருவர் தன்னுடைய காணியை பிக்கு ஒருவர் அபகரித்து அதில் புத்தர் சிலையை அமைத்துள்ளது பற்றிக் கூறினார்.

எவ்வித இழப்பீடுகளும் இதை ஈடு செய்ய முடியாது எனவும் தனக்கு தன் சொந்தநிலம் வேண்டும் என்றும் கூறினார்.

பல படைப்புலனாய்வாளர்களின் இடையூறுகளின் மத்தியிலும் எம் மக்கள் இச்சந்திப்பில் தங்கள் உணர்வுகளை ஆற்றாது அழுது வெளிப்படுத்தினர்.

இறுதி யுத்தத்தின் முடிவுற்ற நேரத்தில் வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் ஒப்படைத்த தங்கள் உறவுகளை மீட்டுத்தாருங்கள் என அப்பிரதிநிதியிடம் மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர். (ம-250)

## உதவிப்பணத்திற்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப்பணம் கோரி விண்ணப்பித்திருந்த 156 பேருக்கு நிதி ஒதுக்கீட்டின் சேமிப்பிலிருந்து ஒரு வருடத்திற்கான உதவிப் பணம் இம் மாத கொடுப்பனவு பட்டியலுடன் வழங்கப்படுகின்றது.

தமது கிராமத்திற்கு அருகிலுள்ள தபாலகம், உப தபாலகம் மூலமாக இக் கொடுப்பனவைப் பெறக் கூடியதாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஏற்பாட்டைச் செய்துள்ளார்.

பொன்னகர் கிராம அலுவலர் பிரிவு மக்களும் இம் மாதம் முதல் திருமுறிகண்டி தபாலகம் மூலமாக கொடுப்பனவைப் பெறும வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வளவு காலமும் 8 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரத் தபாலகத்திற்கு சென்ற கஷ்ட நிலையும் நீக்கப் பட்டுள்ளது. (ம-254)








வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் சமூக நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம் பெற்ற போது...

(படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அப்பிள் அழகி

"சுந்தரபுரம் என்ற நாட்டை அனந்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஐந்து மகன்கள். அவர்களுள் நான்கு பேருக்கு திருமணம் முடிந்தது. ஐந்தாவது இளவரசன் அறிவு, வீரம், அழகு எல்லாவற்றிலும் மிகவும் சிறந்து விளங்கினான். அதனால் அரசருக்கு அவன் மேல் விருப்பம் அதிகம். எங்கே அந்த மகனிடம் அரச பதவியை கொடுத்துவிடுவாரோ என பயந்தனர் மற்றவர்கள்.

இதனால் அவன் மீது பொறாமை கொண்ட அண்ணிகள், "அப்பிள் அழகி என்ற உலகிலேயே சிறந்த அழகி ஒருத்தி உண்டு. அவளை நீ மணந்து வா!" என்று சொல்லி விட்டனர்.

"அவள் எங்கே இருக்கிறாள்?" என்று கேட்டான் இளவரசன்.

"அதான் யாருக்குமே தெரியாதே!" என்றனர் அண்ணிகள்.

"நான் அவளை திருமணம் செய்துக் கொண்டு தான் இங்கே வருவேன்," என்று சொன்னான் இளவரசன்.

அண்ணிகளோ, "நீ அவளை திருமணம் செய்துகொண்டு வந்தால் நாங்கள் உனது அடிமைகள்!" என்று கூறினர்.

அதைக் கேட்ட இளவரசன் தன் வாளுடன் காட்டை நோக்கி நடந்தான். அப்போது தான் அவன் எப்படியாவது ஒழிந்து போவான... என நினைத்தனர்.

அரசரும் "உலகிலேயே யாரும் அடைய முடியாத அப்பிள் அழகியை மணந்து வந்தால் இந்த நாட்டுக்கு நீதான் அரசன்," என்றார்.

காரணம்! அப்பிள் அழகி சிரித்தாலோ வைரக் கற்கள் கொட்டும். அவற்றைகொண்டு நாட்டை செழிப்பாக்கி விடலாம் என நினைத்தார் அரசர்.

அண்ணிகளோ, "இளவரசனால் அப்பிள அழகியை பார்க்கவே முடியாது. ஏனெனில், அவள் எங்கே இருக்கிறாள் என்று யாருக்குமே தெரியாது! இதோடு இவன் ஒழிந்தான்!" என்று நினைத்தனர்.

இளவரசன் காட்டின் நடுவில் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது களைப்பாக இருந்ததால் ஒரு மரத்தடியில் சென்று அமர்ந்தான்.

அந்த மரத்தில் ஒரு பருந்து கூடு கட்டி வைத்திருந்தது. அது முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். அது இரை தேட செல்லும்பொழுது ஒரு நாகம் தினமும் அது இடும் முட்டைகளை குடித்துவிட்டுச் செல்லும். அன்று பருந்தின் குஞ்சுகள் நான்கை கொல்லப் போனது. குஞ்சுகள் கத்துவது இளவரசன் காதில் விழுந்தது. கோபம் வந்தது. உடனே குஞ்சுகளை கொல்வதற்கு தன் வாளுடன் மேலே பார்த்தான். அங்கே பாம்பு, குஞ்சுகளை கொல்லப் போவதைப் பார்த்தான். உடனே பாம்பை கொன்று குஞ்சுகளை காப்பாற்றினான். அதைப் பார்த்து பருந்துகளின் குஞ்சுகள் மிகுந்த சந்தோஷம் அடைந்தன.



"அண்ணா... நீங்கள் யார்?" என்று கேட்டன பருந்து குஞ்சுகள். இதைக் கேட்டதும் இளவரசன் அசந்துப் போனான். அப்பிள் அழகியை திருமணம் செய்யச் செல்வதாக கூறினான் இளவரசன்.

இதைக் கேட்ட பருந்து குஞ்சுகள், "நாங்கள உங்களுக்கு உதவி செய்ய முடியாது. எங்கள் அம்மா, அப்பாவால்தான் முடியும். நாங்கள் சொல்லி உதவி செய்கிறோம். நீங்கள் அந்த செடிகளில் ஒன்பதாவது செடியின் பின் சென்று ஒளிந்து கொள்ளுங்கள். நாங்கள் சொன்னால் மட்டுமே நீங்கள் வெளியே வர வேண்டும். எங்கள் அம்மா, அப்பாவிற்கு கோபம் வந்தால் உங்களையும் கொன்றுவிடுவர். அதனால்தான் சொல்லுகிறோம்," என்றன.

அதைக் கேட்ட இளவரசன் அவர்கள் சொன்ன இடத்திற்கு சென்று ஒளிந்துக் கொண்டான்.

பருந்துகள் கூட்டிற்கு வந்தன. தன் குஞ்சுகள் உயிரோடு இருப்பதையும், முட்டைகள் உடைந்து கிடப்பதையும், பாம்பு துண்டு, துண்டாக கிடப்பதையும் பார்த்து பருந்து இரண்டும் சந்தோஷத்துடன் தன் குஞ்சுகளிடம் கேட்டன.

உடனே ஒரு குஞ்சு நடந்ததை சொன்னது. "அவன் எங்கே இருக்கிறான்?" என்று கேட்டன.

"அம்மா நீங்கள் எங்களுக்கு சத்தியம் பண்ணுங்க. எங்கள் உயிரை காப்பாற்றியவருக்கு ஒரு உதவி செய்வோம் என வாக்குறுதி கொடுத்தால் நாங்கள் அவரை உங்களுக்கு காண்பிப்போம்," என்றன.

"சரி!" என சொல்லியதும். குஞ்சுகள் உடனே, "அண்ணா... இங்கே வாருங்கள்!" என அழைத்தன. அதுவரை நடந்தவற்றை பொறுமையாக பார்த்துக் கொண்டிருந்த இளவரசன் வெளியே வந்து பருந்துகளை வணங்கினான்.

"உனக்கு என்ன வேணடும் என்று சொல்!" என்றன. உடனே இளவரசன் அரணமனையில் நடந்தவற்றை கூறினான்.

உடனே கழுகுகள் அந்த அப்பிள் கன்னி ஏழுமலைகளைத் தாண்டிச் சென்றால் அழகிய தங்க அப்பிள் தோட்டம் வரும்.

அதன் நடுவில் ஒரு மரம் இருக்கும். அதில் இறக்கி விடுவேன்.

அந்த மரத்தை மூன்று சுற்று சுற்ற வேணடும். முதல் சுற்றில் ஒரு கனியை பார்க்க வேண்டும், இண்டாம் சுற்று சுற்றும் பொழுது ஒரு கனியை பார்க்க வேண்டும். மூன்றாம் சுற்று சுற்றும் பொழுது ஒரு கனியை பறிக்க வேண்டும். அந்தக் கனியை அரண்மனைக்கு எடுத்து சென்று பிய்த்து பார்த்தால் அதில் அப்பிள் கன்னி இருப்பாள்.

"அந்த அப்பிளை பறிக்கும் போது அந்த தோட்டத்தின் உரிமையாளன் கொம்பேரி பாம்பு முகத்தையுடைய பாம்பு ராட்சஷன் உன்னை கொத்த வருவான். நீ இந்த நாகக் கல்லை அவன் மீது தூக்கி எறிந்தவுடனே அவன் இறந்து போவான்," என்றது.

இதைக் கேட்ட இளவரசன் சரி என்றான். இளவரசன் அந்த மரத்தை பார்த்து விட்டு சுற்றத் தொடங்கினான்.

முதல் சுற்றில் ஒரு கனியை பார்த்தான். இரண்டாம் சுற்றில் பருந்து சொன்னது போல் பாம்பு முகத்தைக் கொண்ட ராட்சஷன் ஓடி வந்தான்.

நாக்கல்லை அவன் மீது தூக்கி எறிந்தான். ராட்சஷன் "ஆ" என அலறியபடியே மடிந்து போனான். மூன்றாம் முறை மரத்தை சுற்றியதும் தங்க நிற அப்பிள் ஒன்று அவன் கையில் வந்து விழுந்தது.

உடனே பருந்து அவனை தன் முதுகில் ஏற்றி வந்து அவனது நாட்டில் விட்டது.

மறுநாள் அரசனை வணங்கிய இளவரசன் அந்த தங்க அப்பிளை காண்பித்தான். அதன் அழகில் மயங்கினர். அதன் அழகில் மயங்கிய அண்ணிகள், "அது எனக்கு வேண்டும்!" என கெஞ்சினர். ஆனால், இளவரசனோ அப்பிளை இரண்டாகப் பிளந்தான். அதிலிருந்து தங்கச்சிலை போல் அப்பிள் அழகி வெளியே வந்தாள். அவள் அரசனை வணங்கி இளவரசனின் கரத்தைப் பிடித்தாள். அப்படியே அதிர்ந்தனர் அனைவரும். கலகலவென சிரித்தாள்.

வைரங்கள் கொட்டின, அசந்து போன அண்ணிகளும், அண்ணன்களும் தன் தம்பிக்கு கிடைத்த அப்பிள் அழகியை எண்ணி பொறாமைக் கொண்டனர்.

அரசன் தன் மகனுக்கு முடிசூட்டி அப்பிள் அழகியை அரசியாக்கி மகிழ்ந்தான்.

பின்னர் இருவரும் சிறப்பாக நாட்டை ஆண்டனர்.

★★★★★★★★★★★★★★

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2013
06

- 1060–முதலாம் பேலா ஹங்கேரியின் மன்னனாக முடிசூடினான்.
- 1240–உக்ரைனின் கீவ் நகரம் மங்கோலியரிடம் வீழ்ந்தது.
- 1768–பிரித்தானிக்கா கலைக்களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.
- 1790–ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் நியூயோர்க் நகரில் இருந்து பிலடெல்பியாவுக்கு இடம் பெயர்ந்தது.
- 1865–ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை தடை செய்யப்பட்டது.
- 1877–வாஷிங்டன் போஸ்ட் செய்திப் பத்திரிகை முதற்தடவையாக வெளியிடப்பட்டது.
- 1884–வாஷிங்டன் டிசியில் வாஷிங்டன் நினைவுச் சின்ன அமைப்பு வேலைகள் முடிவடைந்தது.
- 1897–வாடகை வாகனம் உலகில் முதற்தடவையாக லண்டனில் சேவைக்கு விடப்பட்டது.
- 1917–பின்லாந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1921–இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1922–ஐரிய சுதந்திர நாடு உருவானது.
- 1941–இரண்டாம் உலகப்போர்: ஐக்கிய இராச்சியம் பின்லாந்து மீது போரை அறிவித்தது.
- 1957–வங்கார்ட் விண்கலம் ஏவப்படுகையில் வெடித்ததை அடுத்து பூமியின் சுற்றுவட்டத்துக்கு ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவது செய்மதி அனுப்பும் திட்டம் தோல்வியடைந்தது.
- 1971–இந்தியா வங்காள தேசத்தை அங்கீகரித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்தியாவுடனான அனைத்து ராஜதந்திர உறவுகளையும் துண்டித்தது.
- 1977–தென்னாபிரிக்கா பொப்புதட்ஸ்வானாவுக்கு விடுதலை அளித்தாலும் எந்த நாடும் அதனை அங்கீகரிக்கவில்லை.
- 1992– அயோத்தியாவில் 16 ஆம் நூற்றாண்டு பழமைவாய்ந்த பாபர் மசூதி இந்து போராளிகளால் இடித்து அழிக்கப்பட்டது.
- 2005–சீனாவின் டொங்சூ என்ற இடத்தில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பல கிராம மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2006–செவ்வாய்க் கோளில் இருந்து மார்ஸ் குளோபல் சேர்வயர் அனுப்பிய படங்களில் இருந்து அங்கு நீர் திரவ நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தியதாக நாசா அறிவித்தது.

### பிறப்புக்கள்

- 1823–மாக்ஸ் முல்லர், ஜேர்மனிய மொழியியலாளர் (இ.1900)

### இறப்புக்கள்

- 1956–பி. ஆர். அம்பேத்கார், தலித் தலைவர் (பி.1891)
- 1982–க.கைலாசபதி, தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் (பி.1933)
- 2005–தேவன் நாயர், சிங்கப்பூரின் மூன்றாவது அதிபர் (பி.1923)

### க.கைலாசபதி



கைலாசபதி மலேசியாவின் கோலாலம்பூரில் பிறந்தவர். தந்தை இளையதம்பி கனகசபாபதி ஆவார். தாயார் தில்லை நாயகி நாகமுத்து ஆவார். தொடக்க கல்வியை கோலாலம்பூரில் பயின்ற கைலாசபதி இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற காலகட்டத்தில் இலங்கை வந்தார்.

உயர் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பின்னர், கொழும்பு றோயல் கல்லூரியிலும் தொடர்ந்தார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத் தில் இளங்கலை சிறப்பு பட்டத்தை 1957 ஆம் ஆண்டு பெற்றார். 1974 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணம் வளாகம் ஆரம்பிக்கப்பட்ட போது, இலங்கை பல்கலைக்கழகத்தின் வித்தியலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமயப் பீடத்துக்கு தலைவராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த இவர், யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைவராக ஜூலை 19 ஆம் திகதி நியமனம் பெற்றார். 1977 ஆம் ஆண்டு வரை இப்பதவியில் இருந்து திறம்படப் பணியாற்றினார்.

ஈழத் தமிழ் இலக்கிய துறையில் பெரும்பங்காற்றி, மிக இளம் வயதிலேயே மாணவர்கள், அறிஞர்கள் மத்தியில் மட்டுமன்றிப் பொதுமக்கள் மத்தியிலும் புகழ்பெற்ற இவர், 49 ஆவது வயதில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி உயிர் நீத்தார்.

இவரது பெயரில் யாழ்.பல்கலைக்கழகத்தில்– கைலாசபதி கலையரங்கு அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை வளர்ப்பென்ன சவாலா?



ஆன்மீகம் 59

கேள்வி:- இன்றைய நாட்களில் அதிகமாக பேசப்படும் சில விஷயங்களில் குழந்தை வளர்ப்பும் ஒன்று. பத்து பிள்ளை பெற்றாலும் குழந்தைகளை அசாதாரண மாய் வளர்த்த இந்த கலாச்சாரத்தில், இன்றோ குழந்தை வளர்ப்பு நம்மைப் பாடாய்படுத் துகிறது. குழந்தையும் படுத்துகிறது! கொஞ சம் ஆடித்தான் போயிருக்கிறார்கள் பலர். என்ன செய்வது?

சத்குரு: பெற்றோர்கள் இப்படி நடந்து கொண்டால் பிள்ளைகள் வெளியில்தான் உதவி தேடிப் போவார்கள். தங்கள் நண்பர் களிடம்தான் ஆலோசனை கேட்பார்கள். அநத நண்பர்களும் உங்கள் குழந்தைபோலவே குழப்பத்தில் இருப்பதால் வழிகாட்டுதல் எந்த வத்த்தில் இருக்கும் என்று உங்களால் கணிக்க முடியாது. தனக்குத் தெரிந்ததை அது சொல் லும். எனவே, மிகச் சிறந்த வழி என்ன வென்றால், உங்களை எளிதாக அணுகும் விதத்தில் இணக்கமான நல்லுறவை குழந் தைகளோடு வளர்த்துக்கொள்வதுதான். குழந்தைகளிடமிருந்து மரியாதையை எதிர்பார்க்காதீர்களள். அன்பை எதிர்பாருங் கள்.

குழந்தைகள் தங்களை மதித்து நடக்க வேண்டும் என்று பெரும்பாலான பெற் றோர்கள் கருதுகிறார்கள். நீங்கள், உங்கள் குழந்தைகளுக்குச் சில ஆண்டுகள் முன்ன தாக பூமிக்கு வந்தீர்கள். உடலளவில் குழந் தையைவிட பெரிதாக இருக்கிறீர்கள். பிழை ப்புக்கு சில தந்திரங்களைத் தெரிந்து வைத் திருக்கிறீர்கள். இவற்றைவிட எந்த விதத்தில் நீங்கள் உங்கள் குழந்தையைக் காட்டிலும் மேம்பட்டிருக்கிறீர்கள்?

உங்கள் இயல்ப்க்ளை குழந்தைகளின் மீது திணிக்காமல் நட்பு ரீதியான உறவை உருவாக்கிக்கொண்டால், அவர்கள் தவறான பாதைக்கு போக வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. அதேநேரம் 100% உத்தரவாதம் கிடையாது. எப்போது ஒரு குழந்தையைப் பெற்றுவிட் டீர்களோ, அப்போதே சில அபாயங்களுக்கும் நீங்கள் தயாராக வேண்டும். ஏனென்றால், உங்கள் குழந்தையின் மீது தாக்கத்தை ஏற் படுத்தப் போவது நீங்கள் மட்டுமல்ல, உங்கள வீதி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, தொலைக்காட்சி தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது, அக்கம் பக்கத்தில் இருப்பவர் களும் பள்ளியில் இருப்பவர்களும் தாக்க த்தை ஏற்படுத்தப் போகிறார்கள்.

## குழந்தைகளிடத்தில் அன்பை எதிர்பாருங்கள்; மரியாதையை அல்ல



இப்படி லட்சக்கணக்கான தாக்கங்கள் ஏற்படப் போகின்றன. அவற்றில் எந்தத் தாக் கத்தின் மீது உங்கள் குழந் தைக்கு மிகுந்த ஈர்ப்பு இருக கிறதோ, அதை நோக்கிச் செல்லப் போகிறது. பெற்றோ ருடன் இருப்பதுதான் தங் களின் மிகப் பெரிய ஈர்ப்பு என்ற உணர்வை நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆன ந்தமான, அறிவுப்பூர்வமான, அற்புதமான மனிதராக உங் களை வெளிப்படுத்திக் கொண டால், உங்கள் குழந்தை வேறெந்தத் துணையையும் தேடிப் போகாது. எளிய விஷ யங்களைக்கூட உங்களிடம் வந்து கேட்கத் தொடங்கும்.

அன்பும் ஆனந்தமும் மிக்க சூழலில் உங்கள் குழந்தைகளை நீங்கள் உருவாக்கினால், தவறுகள் நடக்க வாய்ப்பு இல்லை. வீட்டிலோ, பள்ளியிலோ, சமூகச் சூழலிலோ துயரமான சூழலில் குழந்தை வளர நேர்ந்தால்தான் தவறுகள் நடக்கின்றன. வீட்டுக்குள்ளும் வெளியிலும், நாள்தோறும் கோபம, அச்சம், பரபரப்பு, பாது காப்பின்மை ஆகியவற்றையே குழந்தை கள் எதிர்கொண்டிருந்தால் அவர்கள் எப்படி ஆனந்தமாக வாழ முடியும்? அன்புக்கும் ஆனந்தத்துக்கும் நீங்கள் உதாரணமாய் திகழ்ந்தால், நன்மைகள் தானாக நிகழும்.

பெற்றோரின் லட்சணம் குழந்தை வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**



பெ.மணியரசன்

# முள்ளிவாய்க்கால் முற்றமும் முக்காடு நீங்கிய தமிழின வெறுப்பும்

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றம் பற்றி சில திறனாய்வுகள் வந்து கொண் டுள்ளன. அவை பற்றி தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சியின் நிலைபாட்டைத் தெரிவிக்க வேண்டிய தேவை இருக்கிறது.

முள்ளிவாய்க்கால் முற்றம் தமிழினத் தின் பொதுச் செல்வம். - கல்லில் செதுக்கப் பட்ட தமிழினத்தின் தழும்புகள்.- கால காலத்திற்கும் காக்கப்பட வேண்டிய இனக் கருவூலம். இக்கலைப் படைப்பை நிறுவித் தந்த உலகத் தமிழர் பேரமைப்புத் தலை வர் பழ.நெடுமாறன் அவர்களுக்குத் தமிழி னம் நன்றிக் கடன் பட்டிருக்கிறது.

அதேவேளை, முற்றம் குறித்தும் முற் றத் திறப்புவிழா குறித்தும் செய்யப்படும் சில திறனாய்வுகள் குறித்தும் பேசவேண்டும்.

முற்றத்தின் திறப்பு விழாவிற்கு பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் இந்து மக்கள் கட்சித் தலைவர்களைச் சிறப்புரையாற்ற அழைத் தது தவறென்று சிலர் கூறுகிறார்கள். தமிழீ ழம் - விடுதலைப் புலிகள் ஆகியவை குறித்த நிலைபாட்டில் காங்கிரசுக்கும், பா.ஜ.கவிற் கும் இடையே கருதத்தக்க வேறுபாடு எதுவு மில்லை. இனப்படுகொலைக் குற்றவாளி யான ராஜபக்சவை இந்தியாவுக்கு அழைத் துச் சிறப்புச் செய்ததிலும் - இலங்கைக்குச் சென்று பாராட்டியதிலும் காங்கிரசுத் தலை மைக்கும் பா.ஜ.க. தலைமைக்குமிடையே வேறுபாடில்லை. அத்துடன் பா.ஜ.க., இந்து மக்கள் கட்சி போன்றவை பார்ப்பனியப் பாசறையான ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குடும்ப உறுப்புகள்! எனவே, பா.ஜ.க., இந்து மக்கள் கட்சி ஆகியவற்றின் தலைவர்களை முள்ளிவாய்க்கால் முற்றத் திறப்பு விழாவில் சிறப்புரை ஆற்ற அழைத்திருக்க வேண்டிய தில்லை என்பது த.தே.பொ.க. நிலைபாடு.

ஆனால், அந்த ஒரு காரணத்திற்காக வ்ழாவைப் புறக்கணிப்பதோ, அதை மிகைப் படுத்திக் குற்றஞ்சொல்லி நினைவுச் சின்னத் தின் முகாமைத் தன்மையைக் கொச்சைப் படுத்துவதோ, இனப்படுகொலை செய்யப்பட்ட இலட்சக்கணக் கான ஈழத்தமிழர்களின் ஈகத் தைப் புறந்தள்ளிவிட்டு, உள் ளூர் மனக்கசப்புகளை உலவ விடுவதாக அமையும்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலை வர் தொல். திருமாவளவனை விழாவில் சிறப்புரை ஆற்ற அழைக்காதது பற்றி பேசப் படுகிறது. முள்ளிவாய்க்கால் முற்றத் திறப்பு விழாவில் உரையாற்ற திருமாவை அழைத் திருக்க வேண்டும் என்பது த.தே.பொ.க.வின் கருத்து!

2008 - 2009 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க - போர் நிறுத்தம் கோரி இந்திய அரசை எதிர்த்துப் பல போரா ட்டங்களை நடத்திய அமைப்பு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. கடும் போராட்டங்களை யும் நடத்தியது. அதற்காக அன்றைய முதல மைச்சர் கலைஞர் கருணாநிதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சற்றொப்ப 25 தோழர்களைக் குண்டர் தடுப்புச் சட்டத் தில் சிறையில் போட்டார். மற்றும் சிலரைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் போட்டார். இன்றும் ஈழத்தமிழர்களுக்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பல போராட்டங்களை நடத்தி வருகிறது.

காங்கிரசு - தி.மு.க. கூட்டணியில் திருமா இருக்கிறார், ராஜபக்சவுடன் கைகுலுக்கினார் என்பதற்காக அவரைப் புறக்கணித்திருக்க வேண்டியதில்லை.

கலைஞர் கருணாநிதியை விழாவில் சிறப்புரை ஆற்ற ஏன் அழைக்கவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். அவர்கள் அடுத்து, சோனியா காந்தியை ஏன் அழைக்கவிலலை என்றும் கேட்கக்கூடும். எனவே இதற்கெல் லாம் விடை சொல்லத் தேவை இல்லை. அழைக்கப்படாததற்கான காரணங்கள் ஊர றிந்த உண்மைகள்!

அடுத்து, முள்ளிவாய்க்கால் முற்ற மண்ட பத்தில் பெரியார் படம் வைக்கப்படாதது பற் றிய குற்றச்சாட்டு.

"உண்மைதான்". முள்ளிவாய்க்கால் முற் றத்தில் இடம்பெற்றுள்ள தமிழகத் தலைவர் கள் படவரிசையில் பெரியாருக்கு இடமில்லா மல் போய்விட்டது. கலைஞர் படத்தை வைக் கும் அளவுக்கு அவர்களிடம் நேர்மை உணர்வு இருக்க முடியாது என்பதை நாம் அறிவோம். ஆனால், திட்டமிட்டே பெரியாரின் படத்தை யும் மறைப்பது எவ்வளவு பெரிய வரலாற்று மோசடி!"

படங்கள் வைக்கப்பட்டுள்ளது தொடர் பான விவரங்களைத் தெரிந்து கொள் ளாமலே சுப.வீ சீற்றம் கொள்கிறார். அங்கு வைக்கப் பட்டிருப்பவை சுப.வீ சொல்வது போல் "தமிழகத் தலைவர்களின்" படங்கள் அல்ல. மறைந்த தமிழறிஞர்களின் படங்கள்! பெரியார் தமிழகத் தலைவர்களில் முகா மையானவர் என்பதில் மாற்றுக் கருத்து நமக்கில்லை. ஆனால் அவர் தமிழறிஞர் அல்லர். அரசியல் தலைவர்களாகவும் தமிழ றிஞர்களாகவும் இருந்த தலைவர்கள் சிலரின் படங்கள் அங்கு வைக்கப்பட்டுள் ளன. அறிஞர் அண்ணா, பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவா ஆகியோர் படங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. அறிஞர் அண்ணா சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், திரைக்கதைகள் தீட்டியவர். இலக்கியச் சொற் பொழிவுகள் ஆற்றியவர். ஜீவா கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள், இலக்கியச் சொற் பொழிவுகள் வழங்கியவர். இவ்வாறான இலக்கியப் படைப்புகள் செய்தவர் அல்லர் பெரியார். எனவேதான் அங்கு பெரியார் படம் வைக்கப்படவில்லை.

திரு பழ.நெடுமாறன் இன்றும் தம் தலைவராகக் காமராஜரை மதிக்கிறார். போற்றுகிறார். ஆனால், காமராஜர் படம் அங்கு வைக்கப்படவில்லை. காரணம் படம் வைக்கும் அளவுக்குக் காமராஜர் தகுதி யுடைய தலைவர் அல்லர் என்பதன்று. அவர் இலக்கியப் படைப்பு எதுவும் வழங்கியவர் இல்லை என்பதுதான்!

இயல், இசை, நாடகம் (திரைத் துறை உட்பட) என்ற முத்தமிழ்த் துறையில் சிறப் பாகச் செயல்பட்டவர்கள் படங்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில்தான் நடிகவேள் எம்.ஆர்.இராதா படம் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

"சாதிப்பட்டங்கள் தாங்கிய பெரியவர் களின் படங்களெல்லாம் அங்கு இடம்பெற் றிருக்க சாதியை ஒழிக்கப் போராடிய பெரியா ரின் படத்திற்கு இடமில்லாமல் போய்விட் டது. ஒருவேளை அதுதான் காரணமோ என் னவோ"என்று சுப.வீ மேற்படி இதழில் எழுதி யுள்ளார்.

அக்காலத் தமிழறிஞர்கள் சிலர் பெயரு டன் இயற்பெயர் போல் சாதிப்பெயர் ஒட்டிக் கொண்டுள்ளது. அந்த ஒட்டுப் பெயரை நீக்கி விட்டால் அவர்கள் யாரென்று தெரியாத நிலை உள்ளது. எடுத்துக் காட்டாக ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களை சேது ஏன்று மட்டும் குறித்தால் இக்கால இளையோர் அவரை அடையாளம் காண முடியுமா? அ.சிதம்பரநாதன் செட்டியாரை, சிதம்பரநா தன் என்று குறிப்பிட்டால் அவரை அடையா ளம் கண்டு கொள்வதில் குழப்பம் வருமல் லவா? அவரை, கற்றோர் உலகம் ஏ.சி. செட்டியார் என்றே அறிந்திருக்கிறது. சாதிப் பெயர்களை முடிந்தவரை தவிர்க்க வேண் டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், சாதிவாதத்தை ஏற்பதற்காககத் தான் சாதிப் பெயர்கள் போடப்பட்டுள்ளன என்ற தமது குற்றச்சாட்டை, சுப.வீ ஓர் ஐயம் போல் கிளப்பிவிடுவதில் வாதத்திறமை வெளிப் படவில்லை. வன்னெஞ்சம்தான் வெளிவந் திருக்கிறது. "சாதிப் பெயர் தாங் கிய பெரிய வர்கள்" என்று சுப.வீயே அவர் களை மதிப்போடு குறிப்பிடுகிறார். சாதிப் பெயர் தாங்கிய சிறியர் அல்லரே அன்னார்!

நீதிக்கட்சித் தலைவர்களில் ஒருவரான டி.மாதவன் நாயரை டி.எம். நாயர் என்று வீரமணி, சுப.வீ உள்ளிட்ட திராவிடத் தலைவர்கள் அழைப்பார்கள். தமிழறிஞர் கள் சேதுப்பிள்ளை, சிதம்பரநாதன் செட்டியர் என்றால் இவர்களுக்கு எரிச்சல் வந்து விடுகிறது. நாயர் என்பது திராவிட மலை யாள சாதி அல்லவா! அது "பகுத்தறிவானது" "முற் போக்கானது"

-தொடரும்-

இனையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 31 ஆயிரத்து 504 மாணவர்கள் இடைவிலகல்

(கொழும்பு)

**நாட்டில் கல்வி கற்கும் 56 இலட்சம் மாணவர்களுள் 31 ஆயிரத்து 504 மாணவர்கள் மட்டுமே பாடசாலை செல்லாது இடைவிலகியுள்ளனர். இவர்களில் ஆயிரத்து 841 மாண வர்கள் மாத்திரமே பொருளாதார பிரச்சினையால் பாட சாலை செல்லாதுள்ளனர் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்றுமுன் தினம் நாட்டின் கல்வி நிலை தொடர்பாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் தெளிவுபடுத்தும் பொருட்டு விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரை யாற்றும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு கருத்து தெரிவித்துள் ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் மொத்தமாக 56 இலட்சம் மாணவர்கள் கல்வி கற் கின்றனர்.

நாட்டின் ஆரம்பக் கல்வி வளர்ச்சி தெற்காசியாவில் முதல் இடத்திலும் ஆசியா மற்றும் சர்வதேச மட்டத் தில் அதிஉயர் இடத்திலுமுள்ளது.

இவர்களில் 31 ஆயிரத்து 504 பேர் மட்டுமே பாடசாலைக்கு செல் லாதுள்ளனர். எனவே, பாடசாலை செல்லும் மாணவர்களின் எண் ணிக்கையுடன் ஒப்பிடுகையில் செல்லாதவர்களின் வீதம் 0.55 சதவீதமாகும்.

இவர்களுள் 6 ஆயிரத்து 147 மாணவர்கள் வறுமையின் காரண மாக பாடசாலை செல்லாதுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 841 மாணவர்கள் பொருளாதார பிரச் சினை காரணமாக பாடசாலைக்குச் செல்லாதுவுள்ளனர். எமது நாட் டின் ஆரம்பக் கல்விக்கு 98.3 வீதமான மாணவர்கள் பிரவேசிக் கின்றனர்.

இவர்களுள் 0.23 வீதமா னோர் மட்டுமே விலகுகின்றனர். அத்துடன் இராண்டாம் நிலைக் கல்வியை 99 வீதமான மாணவர் கள் தொடர்கின்றனர்.

இங்கு 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படை யில் இருக்கின்றனர். இது உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகை யில் சர்வதேச மட்டத்தில் எமது ஆரம்பக் கல்வி நிலை உயர்தரத் தில் உள்ளதை காண்பிக்கிறது.

ஆரம்பக் கல்வி மட்டமானது இந்தியாவில் 96 வீதமாக இருக் கின்ற அதேவேளை, இலங்கை யிலும் அதே 96 வீதமே இருக்கின் றது. அத்துடன் 5 ஆம் தரக் கல் வியை இந்தியாவில் 97 வீதமாக வும் அவுஸ்திரேலியாவில் 98.1 வீத மாகவும் ஜேர்மனி, ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளில் 100 வீதமாகவும் இருக்கின்ற அதேவேளை இலங்கை யில் 99.5 வீதமாக காணப்படுகி றது.

எனவே, கல்வி மட்டத்தில் இலங்கை தெற்காசியாவில் முத லாவது இடத்திலும் சர்தேச மட்டத் தில் உயர்ந்த இடத்திலும் உள்ளது. சர்வதேச தரத்திற்கு ஏற்ப கல்வி வளர்ச்சி துரிதமாகக் காணப்படுகி றது என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# வரவு செலவு திட்டத்தால் பெண்களுக்கு நன்மையில்லை

## ரோஸி எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத் தும் ஒரு முயற்சியாகும் எனக் கூறிய ஐக்கிய தேசியக்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் ரோஸி சேன நாயக்க, இந்த வரவு செலவுத் திட் டத்தால் இலங்கையிலுள்ள பெண் கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் கூறினார்.

வரவு செலவுத் திட்டம் வெளிநா டிலும் அர்சதுறையிலும் வேலை செய்யும் பெண்களை உதாசீனம் செய்துள்ளது என ரோஸி சேன நாயக்க கூறினார்.

அரசாங்கம் இந்த பெண்களில் கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும். மேலும் இவர்களின் குடும்ப புலன்களை மேம்படுத்தும் ஏற்பாடுகளையும் செய்திருக்க வேண்டும் என அவர் கூறினார்.

வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் பெண்களின் குடும்பங் களை பராமரிக்க யாரும் இருப்ப தில்லை. இவர்களின் பிள்ளை களையும் இந்த வரவு செலவுத் திட் டம் பூரணமாக உதாசீனம் செய்துள் ளது என அவர் கூறினார். (அ-2)




வல்வெட்டித்துறை பார்வதி இலவச ஆங்கிலக் கல்வி நிலைய ஸ்தாபகர் இராமச்சந்திரன் செல்வகுமாரனின் நிதியுதவியில் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு எல்.சி.பி. தொலைக் காட்சிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. தொலைக் காட் சிப் பெட்டியை ஆங்கில கல்வி நிலைய நிர்வாகி துரைச்சாமி சக்திவேல், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி பொ.கலைச்செல்வியிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# அரசாங்கத்தை கவிழ்க்க பொருளாதாரப் பழி

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

பொருளாதாரத்தின் ஊடாகவே இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபே வர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகள் தொடர்பில் போலியான பிரசாரங் கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டார் நகரில் கசினோ சூதாட்ட மையமொன்று அமைக் கப்படவுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மை யில்லை.

இந்தத் திட்டம் தொடர்பிலான யோசனைத் திட்டத்திற்கு அங்கீ காரம் வழங்கப்படவுமில்லை. நாட்டின் முதலீடுகளை சீர்குலைக் கும் நோக்கில் சில தரப்பினர் செயற் பட்டு வருகின்றனர்.

அர்சாங்கத்தை கவிழ்ப்பதற்கு பொருளாதார வழிகளையே பயன் படுத்த வேண்டும் எனவும் வேறு வழிகளில் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகள் இன்றி நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்த முடியாது என்றார். (அ-2)

# ஐஸ்வரிய தீட்சையும் பகவானின் தரிசனமும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஅம்மாபகவானின் ஐஸ் வரிய தீட்சையும் இணைய ஒளி பரப்பு மூலமான பகவானின் தரி சனமும் உரையாடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடி சைவபரி பாலன சபை மண்டபத்தில் நடை பெறவுள்ளது என யாழ்.மாவட்ட அம்மாபகவான் சத்சங்க ஒன்றி யம் அறிவித்துள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாயன்மார்கட்டு முரளி மாலினி சத்சங்க நிலையத்தில் நன்றி தொடர்பான நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-5)

# சிறந்த பாற்பசு பண்ணையாளர்களுக்கு பரிசுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இவ்வாண் டில் சிறந்த பாற்பசு பண்ணையா ளர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்து அவர்களுக்கு பெறுமதி மிக்க பணப்பரிசில்கள் வழங்குவ தற்கு வடக்கு மாகாண விவசாய கமலநல சேவைகள், கால்நடை பராமரிப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற் றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாற்பசு பண்ணையாளர்கள் இப்போட்டிக் கான விண்ணப்பப்படிவத்தை எதிர் வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை தங்களது பிரதேச கால்நடை வைத் திய அலுவலகங்களிலிருந்து பெற் றுக் கொள்ளலாம்.

அத்துடன் பூரணப்படுத்திய விண் ணப்பப்படிவங்களை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ தங்களது பிரதேச கால்நடை வைத் திய அலுவலகங்களில் சமர்ப்பிக்கு மாறு பணிப்பாளர் மருத்துவர் எஸ்.வசீஹரன் கேட்டுள்ளார். (அ)

# எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இழந்தே மக்கள் வாழ்கின்றனர்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் எதிர்ப்பார்ப்பை இழந் துள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா தெரி வித்துள்ளார்.

திக்வெல்ல பிரதேசத்தில் நடை பெற்ற பிரசாரக் கூட்டங்களில் பங் கேற்ற போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த நாட்டில் தற்போது கேள் விப்படும் பல விடயங்கள் துரதிர் ஷ்டவசமானவையே. நாளைய தினம் பற்றி நம்பிக்கையற்றே அதி களவானவர்கள் வாழ்கின்றனர்.

சுதந்திரம் கிடைக்கப்பெற்ற காலத்திலிருந்து ஆட்சி செய்த ஆட்சி யாளர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல் தலைவர்களின் நோக் கங்கள் நிறைவேற்றப்பட்ட போதி லும் மக்கள் வாழ்க்கையில் முன் னேற்றம் இல்லை.

அரசியல்வாதிகள் மக்களுக்கு போலி வாக்குறுதிகளை அளித்த னர். ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல் தலைவர்கள் [illegible] மீது கோபத்துடன் இருக்கின்றனர் மக் கள்.



நாம் அந்தக் கூட்டத்துடன் இணைந்து கொள்ளப் போவ தில்லை. புதிய அரசியல் கலாசார மொன்றை உருவாக்குவோம்.

ஊழல் மோசடி மிக்க ஆட்சியா ளர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்க மக்களுடன் இணைந்து போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பணிக்கொடை கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனத்தில் வேலை செய்து இளைப்பாறியவர் களுக்கான பணிக்கொடை கொடுப் பனவுகள் கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக் கம் யாழ்.மாவட்ட உதவித் தொழில் அலுவலகத்தால் வழங்கப்பட்டு வரு கின்றது.

இதுவரை கீழ்க்குறிப்பிடப்படும் 3 உத்தியோகத்தர்கள் மேற்படி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள வில்லை.

எனவே, அவ் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் கொடுப்பனவு களை பெற்றுச் செல்லுமாறு உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீல லோஜினி ஜெகதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

கொடுப்பனவுகளை பெறாதோர் விபரம் வருமாறு: எஸ்.பாலசிங்கம், வி.அருளானந்தம் ,என்.ராஜலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ள னர்.

அத்துடன் இலங்கை மத்திய போக்குவரத்து சபையில் வேலை செய்து இளைப்பாறியவர்களுக் கான பணிக்கொடைக் கொடுப்பனவு களில் 12 உத்தியோகத்தர்கள் மேற் படி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளவில்லை. அவ் உத்தியோ கத்தர்களையும் அத்தினத்திற்கு முன் னர் பெற்றுக் கொள்ளுமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது. அழைக்கப்பட் டுள்ளோர் விபரம் வருமாறு:

எஸ்.ஜெயபாலன், எஸ்.சிறித ரன், ரி.தவனேசராசலிங்கம், கே.கங் காதரன், எம்.பரஞ்சோதி, ஆர்.கணே சன், கே.சிவராஜா, ஐ.துரைரட்ணம், எஸ்.செல்வரட்ணம், ஏ.செல்வராஜா, ரி.தனபாலசிங்கம், கே.காங்கேசன் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ள னர். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கலைஞர்களின் விபரங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகபிரிவை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட 60 வயதிற்கு மேற்பட்ட துறைசார்ந்த கலைஞர்களின் விபரங்களை மிக விரைவில் தெல்லிப்பழை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலி .வடக்கு பிரதேச செயலர் கே. சிறீமோகன் அறிவித்துள்ளார் மேற்படி சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம், சித்த மருத்துவம் ,சமூக சேவையாளர் தவில், நாதஸ்வரம் ஆகிய துறைகளை சேர்ந்த கலைஞர்களின் விபரங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளன. (அ-5)

## எதனோல் பீப்பாய்கள் பொலிஸாரால் மீட்பு

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கடத்தப்பட்ட எதனோல் பீப்பாய்கள் மீட்கப்பட்டுள்ளன. தார் பீப்பாய்கள் என்ற போர்வையில் கொள்கலன் ஒன்றினூடாக இவ்வாறு எதனோல் கடத்தப்பட்டுள்ளது.

ஒரு கொடவத்தை பிரதேச சுங்கப் பிரிவினர் குறித்த எதனோல் தொகுதியை மீட்டுள்ளனர். சுமார் 75 ஆயிரம் லீற்றர் எதனோல் சட்டவிரோதமன முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த எதனோலின் பெறுமதி 82 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. மதுபானம் தயாரிப்பதற்காக எதனோல் பயன்படுத்தப் படுவதாக குறிப்பிடுகின்றது. (அ-2)

# இலங்கையில் முதலீடு செய்வதில் இவ்வாண்டு சீனாவே முன்னணி

## புள்ளி விபரங்களில் தகவல்

(கொழும்பு)

**2013 ஆம் ஆண்டில் இலங்கையின் மிகப் பெரிய நேரடி முதலீட்டாளராக சீனா மாறியுள்ளது. முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களில் இருந்து இது தெரியவந்துள்ளது.**

இந்த ஆண்டில் 2 பில்லியன் வெளிநாட்டு முதலீட்டைப் பெறுவதற்கு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்திருந்தது. எனினும், நவம்பர் மாதம் வரை 1.2 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகளையே ஈர்க்க முடிந்துள்ளது.

இதில் சீன நிறுவனங்கள் 24 சதவீத முதலீட்டை செய்துள்ளன. அடுத்து, 12 சதவீதம் ஹொங்கொங் முதலீடு செய்துள்ளது. 10 சதவீத முதலீடுகளுடன் சிங்கப்பூர் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. மலேசியாவும், நெதர்லாந்தும் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. கடந்த ஆண்டில் 1.2 பில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றிருந்தது.

எனினும், நவம்பர் மாதமே, கடந்த ஆண்டு இலக்கை மிஞ்சியுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளில் 31 சதவீதமானவை, உற்பத்தித்துறைகளிலும், 19 சதவீத முதலீடுகள் முனையங்களிலும், 17 சதவீதமான வெளிநாட்டு முதலீடுகள் தொலைத் தொடர்புத்துறையினும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சொத்து அபிவிருத்தியில் 13 சதவீதமும், விடுதி மற்றும் உணவகங்களில் 6 சதவீதமும் வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றில் ஒரு- சதவீத வெளிநாட்டு முதலீடு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில், முதலீட்டுச்சபை, 1.9 பில்லியன் டொலர் பெறுமதியான 118 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

இவற்றில் 105 திட்டங்கள் தொடர்பான உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன. 55 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டில், சீனாவும் இலங்கையும் 15 தூதுக்குழுக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளன.

இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வளர்ச்சியடையும் என்று அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியுள்ளார்.

30 ஆண்டுகாலப்போர் 2009 இல முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு கடன்வழங்கும் மிகப்பெரிய நாடாக சீனா மாறியுள்ளது.

2009 இல், 1.2 பில்லியன் டொலரையும். 2010 இல் 821 மில்லியன் டொலரையும், 2011 இல், 784 மில்லியன் டொலரையும், சீனா கடனாக வழங்கியிருந்தது. (அ)

## கோயில் நகரம் இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கோயில் நகரம் இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக கலாசாரப் பேரவை தலைவர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வுக்கான ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலா கிருஷ்ண ஐயர் வழங்கவுள்ளார்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஊடாக வளங்கள் மற்றும் பயிற்சி மைய பணிப்பாளர் தே.தேவானந் வழங்க மதிப்பீட்டுரையை யாழ். பல்லைக்கழக உயர் கற்கைநெறி பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் வழங்கவுள்ளார்.

இறுவெட்டு முதற் பிரதியை கொனிக்கா கலர் லாப் உரிமையாளர் வீ.ஶ்ரீதரன் பெற்றுக் கொள்கிறார். (அ-5)

யா/ புத்த கலட்டி சிறி விஷ்ணு வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- உ.சாளீன், மானிப்பாய் செய்தியாளர்)





# வரவு செலவு திட்டத்தில் 50 வீதம் ஜனாதிபதியின் குடும்பத்தாருக்கு

## கரு ஜயசூரிய எம்.பி.காட்டம்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தின் 50 வீதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவை தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கசினோ மற்றும் ராஜபக்ஷ நட்பான இந்த வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு எதிரானது என்பதுடன் இதில் பல்வேறு விடயங்களுக்கு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொருட்கள் சேவைகளுக்கான விலை உயர்வடையும். இதன் மூலம் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

சமூகத்திற்கு நன்மை ஏற்படுத்தும் வகையிலோ குறுகியகால அல்லது நீண்ட காலத் திட்டங்கள் அடிப்படையிலோ இந்த வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட வில்லை.

இது அரசியல் நோக்கத்திற்காகவே பயன்படுத்திக் கொண்டுள்ளதுடன் மக்கள் நலன் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு தேர்தலையும் எதிர் நோக்கத் தயார் என்றார்.

இதேவேளை, ஐ.தே.க.எம்.பி. எரான் விக்கிரமரட்ன தெரிவிக்கையில்,

அரசாங்கம் எதேச்சதிகார போக்கில் செயற்பட்டு வருவதுடன் பொருளாதாரம் பற்றிய புள்ளிவிபரத் தரவுகளை திரிபுபடுத்தி போலித் தகவல்களை வெளியிட்டு வருகிறது.

உச்சநீதிமன்றம் திவிநெகும திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டபோதிலும் பாராளுமன்றத்தை பயன்படுத்தி அந்தத் திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

செயற்கையான முறையில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பாராளு மன்றில் உருவாக்கிக் கொண்டுள்ள அரசாங்கம் நீதிமன்றத்திற்கு எவ்வித மரியாதையையும் அளிப்ப தில்லை.

புள்ளிவிபரத் தரவுகளின் மூலம் நாட்டின் பொருளாதாரம் சுபீட்சமாக காணப்படுவதாக வெளிப்படுத்தப்படுகின்றபோதும் மெய்யாகவே நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியே வருகின்றது.

இதேவேளை, நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றின் தீர்ப்பை அரசாங்கம் உதாசீனம் செய்ததில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# தோல்வியை சந்தித்த கட்சிகள் அரசுடன் இணைய வேண்டும்

## பசில் அழைப்பு



(கொழும்பு)

கடந்த தேர்தல்களில் தோல்விகளை சந்தித்த அரசியல் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து அரசின கொள்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில அரசியல் கட்சிகளின் வாக்கு வங்கிகள் பூஜ்ஜியத்தை அடைந்துள்ளன. இந்த அரசியல் கட்சிகள் அரசுடன் இணைவதன் மூலம் அவர்கள் இழந்த ஆதரவை மீண் டும் பெறமுடியும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எப்பொழுதும் மக்களின் ஆதரவை நம்பியே இருக்கின்றார். பல தேர்தல்களில் மக்கள் அவருக்கு ஆணையை வழங்கியுள்ளனர் .

அதேவேளை நியூயோர்க் டைம்ஸ் செய்தித்தாளுக்கு போட்டியொன்றை வழங்கியுள்ள அமைச்சர் பசில், அரசாங்கம் அடுத்த வருடத்தில் தேர்தல்களை நடத்தவுள்ளதாகவும் அரசாங்கம் உறுதியான நிலையிலேயே இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இலங்கையின் குற்றங்கள் தொடர்பான வீதம் தவறான முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் குற்றச் செயல்கள் அதிகரிக்கப்படவில்லை. இருந்த குற்றங்களின் வீதத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தி வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமை வாய்ந்த மக்களாட்சியின் பொன்மகுடம்- எதென்ஸ் சிற்றரசு



கி.மு.550: மக்களாட்சி பற்றி உலகம் அறிந்திராத காலப்பகுதி அது. இறைமை என்பது மன்னர்களின் தெய்வீக உரிமை என்ற மாயவுலகிற்குள் மக்களை மன்னர்களும், பூசாரிகளும் மயக்கி வைத்திருந்த புராதன காலம் அது. அப்படிப்பட்ட ஒரு காலப்பகுதியில் தோற்றம் பெற்றதே **எதென்ஸ் சிற்றரசு.** கிரேக்க தேசத்தில் அன்று இயங்கிய சிற்றரசுகளில் வலிமை வாய்ந்ததாக மட்டுமன்றி மக்களாட்சியை அறிமுகப்படுத்திய சிற்றரசாகவும் அது விளங்கியது. அங்கு மன்னர்கள் இருக்கவில்லை: அமைச்சர்களும் இருக்கவில்லை. ஆனால், அரசாங்கம் இருந்தது. அந்த அரசாங்கத்தை மக்களே இயக்கினார்கள். தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் ஊடாக அல்லாது நேரடியாகவே அரசாங்கத்தை மக்கள் நிர்வகித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் எதென்ஸ் நகரின் மையத்தின் அதன் குடிமக்கள் அனைவரும் கூடுவார்கள். தெருக்களை சுத்தப்படுத்துவது தொடக்கம் எதிரி நாடுகள் மீது போர் தொடுப்பது வரை காரசாரமாக விவாதிப்பார்கள். ஒவ்வொரு விவாதங்களின் முடிவிலும் வாக்கெடுப்பு இடம்பெறும். வாக்கெடுப்பில் பெரும்பான்மையான குடிமக்களின் ஆதரவைப் பெற்ற நிலைப்பாடு அரசாங்கத்தின் முடிவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்படும்.

அங்கு தேர்தல் காலம் என்றோ அன்றி தேர்தல் பரப்புரை என்றோ இருக்காது. ஏனென்றால், ஒவ்வொரு நாட்களுமே தேர்தல் நாட்களாக இருக்கும். தேர்தலில் வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு தேர்தலில் வெற்றி பெற்றதும் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடும் அரசியல்வாதிகள் பற்றிய பேச்சுக்கே எதென்சில் இடமிருக்கவில்லை.

இன்றைய தாராண்மை ஜனநாயக நாடுகளில் நிலவுவது போன்று குடிமக்கள் வேறு, அரசியல்வாதிகள் வேறு என்ற நிலை அன்றைய எதென்ஸ் சிற்றரசில் இருக்கவில்லை. ஏனென்றால் அனைத்துக் குடிமக்களுமே அரசியல்வாதிகளாக விளங்கினார்கள்.

இதுபற்றி அக்காலப் பகுதியில் நிகழ்த்திய உரையொன்றில் எதென்ஸ் சிற்றரசின தளபதிகளில் ஒருவராக விளங்கிய **தூசிடீஸ** பின்வருமாறு தெரிவித்தார்:- "இங்கு அரசியலில் ஈடுபடாதிருக்கும் ஒருவரை தனது வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கும் பிரச்சினையற்ற ஒருவராக நாம் கருதுவதில்லை. ஏனென்றால், அப்படிப்பட்ட ஒருவருக்கு எங்கள் நாட்டில் இடமில்லை." இவ்வாறு மக்களாட்சியின் பொன்மகுடமாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட எதென்ஸ் சிற்றரசில் மிகப் பெரும் குறைபாடுகளும் இருக்கத்தான் செய்தன.

அங்கு பெண்களுக்கு எந்தவொரு உரிமையும் இருக்கவில்லை. குடிமக்கள் என்ற வரையறைக்குள் பெண்கள் உள்ளடக்கப்படவில்லை: ஆண்களுக்கு மட்டுமே குடிமக்கள் என்ற தகைமை அளிக்கப்பட்டிருந்தது. தவிர ஒவ்வொரு வீட்டிலும் அடிமைகள் இருந்தார்கள். ஒவ்வொரு வீட்டின் தலைமகனும் செய்ய வேண்டிய பணிகளை அடிமைகள் செய்தார்கள். அதனால் ஒவ்வொரு நாளும் அரசாங்கப் பணிகளில் ஈடுபடுவதற்கு எதென்ஸ் சிற்றரசின் ஒவ்வொரு குடிமகனுக்கும் போதிய அளவு நேரம் இருந்தது.

இவ்வாறான பல குறைபாடுகளை எதென்ஸ் சிற்றரசு கொண்டிருந்தாலும்கூட 'குடிமக்கள்' என்ற தகைமை பெற்றிருந்த மக்கள், மக்களை, மக்களுக்காக நேரடியாக ஆட்சி செய்த மக்களாட்சி முறையைக் கொண்ட நாடு என்ற பெருமையை பண்டைய உலகில் எதென்ஸ் சிற்றரசு தனதாக்கிக் கொண்டது.

மக்களாட்சியின் விழுமியங்களைப் பேணுவதாக இன்று பல நாடுகள் பெருமை பேசினாலும்கூட எதென்சில் நிலவியது போன்று மக்களின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட ஜனநாயக ஆட்சிமுறையை உலகின் எந்தவொரு நாடும் இற்றைவரை கொண்டிருக்கவில்லை என்பதுதான் உண்மை.

உலகின் மிகப் பெரும் ஜனநாயகம் என்று கூறிக்கொள்ளும் இந்தியாவும் சரி, தாராண்மை ஜனநாயகத்தின் விழுமியங்களை முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்காவும் சரி இந்த யதார்த்தத்திலிருந்து விலக்குப் பெற முடியாது.

ஆனால், இன்றைய நவீன உலகில் நேரடி மக்களாட்சி முறைமையின் விழுமியங்களைப் பின்பற்றும் இனம் என்று உரிமைகோரும் முழுத் தகைமையும் தமிழ் ஈழ தேசிய இனத்திற்கு உண்டு. 1989ஆம் ஆண்டு முதன் முறையாக மாவீரர் நாளை தமிழ் ஈழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அறிமுகம் செய்து வைத்த பொழுது நேரடி மக்களாட்சி முறைமையின் விழுமியங்களைப் போற்றிப் பேணத் தொடங்கிய தமிழ் ஈழதேசம் இற்றைவரை அதனைப் பின்பற்றி வருகின்றது.

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் தமிழ் ஈழ தேசம் சிக்கியிருந்த அன்றைய காலப்பகுதியில் மணலாறு காட்டிற்குள் அமைக்கப்பட்டிருந்த பாசறையன்றில் போராளிகள் புடைசூழ தனது மாவீரர் நாள் கொண்டாடப் பிரகடன உரையை தமிழ் ஈழ தேசியத் தலைவர் நிகழ்த்தினார்.

அக்காலப் பகுதியில் வட தமிழ் ஈழத்தின் வனப்பகுதிகளில் இயங்கிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பாசறைகளிலும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதரவாளர்களின் இல்லங்களில் தலைமறைவாகவும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆனால், தென்தமிழ் ஈழத்தில் அப்பொழுது நிலைமை வேறு விதமாக இருந்தது. இந்தியப் படைகளின் கூலிப்படையாக விளங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தமிழ்த் தேசிய இராணுவத்தை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து விரட்டியடித்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அங்கு மாவீரர் நாள் நிகழ்வுகளை மேற்கொண்டனர்.

அப்பொழுது தென் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளில் தமிழ் ஈழ தேசியத் தலைவரின் பிரதிநிதிகளாக தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், யோகரத்தினம் யோகி ஆகியோர் கலந்து கொண்டு மக்களிடையே தலைவர் பிரபாகரனின் நிலைப்பாட்டை எடுத்து விளக்கினார்கள்.

பிரேமதாசா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு தமிழ் ஈழத் தேசியத் தலைவர் எடுத்த முடிவு பற்றியும், அதன் விளைவாக விரைவில் தமிழ் ஈழ மண்ணை விட்டு இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் அகலும் சூழல் ஏற்படும் என்பதையும் தலைவரின் பிரதிநிதிகள் விளக்கிய பொழுது அதற்கு தமது முழுமையான ஆதரவை மாவீரர் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட தென்தமிழ் ஈழ மக்கள் வழங்கினார்கள்.

இதன்மூலம் எதென்ஸ் சிற்றரசுக்குப் பிறகு நேரடி மக்களாட்சி முறைமையின் விழுமியங்களை போற்றிப் பேணத் தொடங்கிய தேசிய இனம் என்ற நிலையை தமிழ் ஈழ தேசிய இனம் அடைந்தது. தமிழ் ஈழ மண்ணை விட்டு இந்தியப் படைகள் அகன்றதைத் தொடர்ந்து, 1990ஆம் ஆண்டு தமிழர் தாயகம் முழுவதற்கும், புலம்பெயர் தேசங்களுக்கும், ஈற்றில் தாய்த் தமிழகத்திற்கும் இம்முறைமை விரிவாக்கம் பெற்றது.

ஒவ்வொரு மாவீரர் நாளன்றும் தனது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் பற்றிய செய்தியைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வெளியிடுவார். உலகின் பட்டி தொட்டிகளெங்கும் இருந்தவாறு இதனை உன்னிப்பாக செவிமடுக்கும் ஒவ்வொரு தமிழரும், தமிழ் ஈழத் தேசியத் தலைவரின் உரை நிறைவடைந்ததும் மாவீரர்களுக்கு சுடரேற்றித் தலைவரின் வழியில் தமிழ் ஈழத் தனியரசை நிறுவுவதற்கான உறுதிமொழியை எடுப்பார்கள்.

இந்த வகையில் புராதன எதென்ஸ் சிற்றரசில் நகர மையத்துடன் மட்டும் முடக்கப்பட்டிருந்த நேரடி மக்களாட்சி முறை, தமிழ் ஈழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உலகமயப்படுத்தப்பட்டது எனக்கூறின் மிகையில்லை.


இன்று தமிழ் ஈழ தேசியத் தலைவரின் தொடர்பு இழக்கப்பட்ட நிலையிலும் கூட ஒவ்வொரு மாவீரர் நாளன்றும் உலகின் பட்டிதொட்டிகள் தோறும் அணிதிரளும் ஒவ்வொரு தமிழரும் எடுக்கும் உறுதிமொழி 'தலைவரின் வழியில் தமிழ் ஈழத்தை நிறுவுவோம்' என்பதே. இதனைத்தான் இவ்வாண்டும் ஒவ்வொரு தமிழரும் உலக சமூகத்திற்கு இடித்துரைத்துள்ளார்கள்.

தமிழ் ஈழ தேச விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஈந்த ஒவ்வொரு மாவீரர்களையும் ஒட்டுமொத்தமாக நினைவு கூர்வதற்காகத் தமிழ் ஈழத் தேசியத் தலைவரால் 1989ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மாவீரர் நாள் இன்று இருபத்திநான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழ் ஈழத் தனியரசு நோக்கிய பாதையில் தமது இலட்சிய உறுதியை ஜனநாயக வழியில் ஒவ்வொரு தமிழரும் உலகிற்கு இடித்துரைக்கும் நாளாகப் பரிணமித்துள்ளது.

**இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி விரைவாக செயற்படவேண்டுமா?



மிக மெதுவாகச் செயற்படும் கணினி உங்களை வெறுப்பேற்றுகிறதா? கீழ்க்கண்டவற்றைப் பின்பற்றுவதன் மூலமாக உங்கள் கணனியை விரைவாகச் செயற்பட வைக்க முடியும்.

1. **உங்கள் கணனியைச் சுத்தம் செய்யுங்கள்:** உங்கள் கணணியின் டெஸ்க்டாப் அடைசலாக இல்லாமல் இருந்தாலே உங்கள் கணனி விரைவாகச் செயலற்படத் தொடங்கும். அதேபோல், உங்கள் C: (Drive) முழுக்க கோப்புகளை அடைத்து வைக்காமல நிறைய வெற்றிடம் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும். குறைந்தது 25 சதவீத இடமாவது காலியாக இருந்தால்தான் கணனியின் வேகம் அதிகரிக்கும்.

இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யுமுன் உண்மையிலேயே அது தேவையான கோப்புதானா என்று பார்த்துக்கொண்டு பதிவிறக்கம் செய்யுங்கள். அக்கோப்பின் பயனபாடு முடிந்தபின் அதை அழித்துவிடுங்கள்.

உங்களுக்குப் பயன்படாத மென்பொருட்களைத் தேவையில்லாமல் சேமித்து வைக்க வேண்டாம்.

புகைப்படங்கள், பவர்பொயிண்ட்கள், திரைப்படங்கள், பாடல்கள் இவற்றைத் தனியாக “சிடி“ “டிவிடி“க்களில் பதிந்து வைத்துக்கொண்டால், “ஹார்ட் டிஸ்க்“ இடமும் மிச்சமாகும். உங்கள கணனி பாதிப்படைந்தாலும், இவை பத்திரமாகவே இருக்கவும் உதவும்.

“ஸ்டார்ட்“ ஐ சொடுக்கவும். “ரன்“ என்பதைத் தேர்ந்தெடுத்து அதில் “%Temp%“ என்று தட்டச்சு செய்து “Enter“ ஐத் தட்டவும். தற்காலிகமாகத் தேவைப்பட்ட, சேமிக்கப்பட்ட கோப்புகள் உள்ள Folder திறக்கப்படும். அதில் உள்ள கோப்புகளை எல்லாம் முழுமையாக அழித்துவிடவும்.

தேவைப்படாத கோப்புகளை அழிக்கையில் “Shift Key“ஐப் பிடித்துக்கொண்டு அழிப்பதன் மூலம், Recyecle Bin இல் கோப்புகள் சேராமல் நேராக அழிக்கப்படும். அடிக்கடி உங்கள் Recycle Bin ஐக் காலி செய்வது அவசியம். ஏனெனில் அழிக்கப்பட்ட கோப்புகள் Recycle Bin இல் இருக்குமானால் உங்கள் சி டிரைவின் இடத்தை அது எடுத்துக்கொள்ளுவதாகவே ஆகிறது.

2. உங்கள் கணனித் திரையில் “Wall Paper“ பயன்படுத்தாதீர்கள். அது கணனிச் செயற்பாட்டின் வேகத்தைக் குறைக்கக் கூடியது.

3. கூடியவரை ஒரே நேரத்தில் பல கோப்புகளைத் திறப்பது, பல மென்பொருட்களைப் பயன்படுத்துவது வேகத்தைக் குறைக்கும். தேவையென்றால் ஒழிய, பல கோப்புகளைத் திறந்து வைக்கவேண்டாம். அப்படி ஒரே நேரத்தில் பல கோப்புகளைத் திறக்க நேர்ந்தால், அப்பொழுது பயன்படுத்தும் கோப்பைத்தவிர மற்றவற்றைச் சிறிதாக்கி (Minimize) வைக்கவும்.

4.கணனியில் பாடல் கேட்டுக்கொண்டே வேலை செய்வது உங்களுக்குச் சுகம்தான். ஆனால் உங்கள் “RAM“ இன் சக்தி கண்டிப்பாகக் குறைந்துவிடும். முடிந்தால் இதைத் தவிர்க்கலாம்.

5. உங்கள் கணனியில் “விண்டோஸ்“ ஒவ்வொரு முறை தொடக்கப்படுகையிலும், அத்தனை எழுத்துருக்களையும் (Fonts) லோட் செய்கிறது. இதனாலும், தாமதம் ஏற்படலாம். இதைத் தவிர்க்க, நீங்கள் பயன்படுத்தாத எழுத்துருக்களை கணனியில் இருந்து நீக்கி விடலாம். அதற்கு, உங்கள் C:\Windows சென்று Fonts/ போல்டரைத்திறந்து, தேவைப்படாத எழுத்துருக்களை அழித்துவிடுங்கள். (எ.கா. Windings). **உங்கள் கணனி பயன்படுத்தும் எழுத்துருக்கள் சிவப்பு நிறத்தில் A என்ற எழுதப்பட்டிருக்கும். அவற்றை அழித்து விடக்கூடாது. கவனம்.**

6. பொதுவாக கணனியில் கோப்புகள் பதியப்படும்பொழுது துண்டாக்கப் பட்டுப் பதியப்பட்டிருக்கலாம் (Fragmentation). இதன் காரணமாக நீங்கள் ஒவ்வொரு முறை அந்தக கோப்பைத் திறக்கும்பொழுதும் கணனி அந்த முழுக் கோப்பின் துண்டுகளைத்தேடித் தேடி இணைத்துத் தருகிறது. இதனால் நீங்கள் கோப்பைத் திறக்கத் தாமதமாகிறது. இப்பிரச்சினை, நீங்கள் குறைந்தது மாதம் ஒரு முறையாவது உங்கள் கணனியை Defragmentation செய்வதன் மூலம் தீர்ந்து விடும். எப்பொழுதெல்லாம் உங்கள் கணணியில் ஏராளமான கோப்புகள் குவிந்து விடுகின்றனவோ, உங்கள் கணனி hard Disk உள்ள காலியிடம் 15 சதவீதத்திற்கு கீழ் வந்து விடுகையிலோ, நீங்கள் உங்கள் கணனியில புதிய நிரல்கள் அல்லது “விண்டோஸ்“ மென்பொருளின் சமீப வெளியீடு எதையாவது நிறுவுகையிலோ நீங்கள் Defragmentation செய்வது மிகவும் அவசியம்.

7. தேவையற்ற பயன்படாத Port களை முடக்கிவையுங்கள்.

8. உங்கள் Hard Disk ஐ, பிரித்து “சி“ “டி“, “இ“ எனத்தனித்தனியாக வைப்பது உங்கள் கணணியில் செயற்பாடு வேகமடைய உதவும்.

9. சமீபத்தில் பார்க்கப்பட்ட கோப்புகள் என்ற பயன்பாட்டை நீங்கள் உபயோகப்படுத்துவதில்லை எனில், அதை நிரந்தரமாக முடக்கி வைக்கலாம். இது உங்கள் கணனியின் வேகத்தைக் குறைக்கும் ஒரு செயல் பாடு. அதை முடக்குவதன் மூலம் உங்கள் கணனியின் வேகம் அதிகரிக்கிறது.

10. இணையத்தில் தேவையற்ற விளம்பரங்கள் வந்து உங்கள் நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்க “AdBlocker“ பொருத்துங்கள்.

16. இது எல்லாவற்றையும் விட மிகவும் எளிய வழி.. பழைய கணனியை Upgrade செய்து பயன்படுத்தாமல் ஒரு புதிய நவீனமான கணனியை வாங்கி விடுங்கள்.


# அழிந்த தரவுகளை மீட்க புதிய மென்பொருள்




தாங்கள் அழித்த பைல் Recycle Bin இல் இருந்தால் சரி அதை Restore தந்து மீண்டும் பெறலாம், ஆனால Recycle Bin இருந்து அழிந்த பைல் களை மீட்பது அதாவது மீண்டும பெறுவது என்பதை பற்றி பார்ப்போம்.

நாம் சில சமயங்களில் ஏன்..பல சமயங்களில் சில பைல்களை தெரியாமல் அழித்து விடுவோம்.பிறகு தான் தெரியும் ஆகா! ஆகா! அந்த பைல் மீண்டும் வேண்டுமே என்று அப்படிபட்ட சூழ்நிலையை கையாள மிக அருமையான மென்பொருள் ஒன்று உள்ளது அதன் பெயர் Recuva.


இதன் மூலம் தங்கள் கணனியில் அழிந்த எந்த வகையான பைல்களையும் மீண்டும் பெறலாம் அனைத்து டிரைவுகளிலும், மேலும் Removable டிரைவுகளான பெண்டிரைவ், மெமரிகார்டு போன்றவற்றில் அழித்த பைல்களை கூட மீண்டும் பெறலாம். இதில் மிக சந்தோசமான செய்தி என்வென்றால் இந்த மென்பொருள் முற்றிலும் இலவசமே!




முதலில். இந்த மென்பொருளை தங்கள் கணனியில் பதிந்து கொள்ளுங்கள். பின்னர் இதை இயக்குங்கள் தற்போது தாங்களுக்கு பைலின் வகை படுத்த ஓர் விண்டோ தோன்றும். இதில் தாங்கள் தேடியிருக்கும் பைலின் வகையை தேர்வு செய்யவும்.




பின்னர் NEXT என்பதை அழுத்தவும் தற்போது தாங்கள் தேட இருக்கும் பைலின் இருப்பிடத்தை தேர்வுசெய்யவும். உதாரணமாக நான் எனது பென்டிரைபில் அழிந்த பைல்களை தேட எண்ணுகிறேன் என்றால். On my video card or ipod என்பதை தேர்வு செய்ய வேண்டும். இல்லை எனக்கு அனைத்து டிரைவுகளிலும் தேட வேண்டும் என்றால் I'am not sure என்பதை தேர்வு செய்யவும்...





பின்னர் Next என்பதை தேர்வு செய்ய வேண்டும் தற்போது தோன்றும் திரையில் கீழே Enable Deep Scan என இருக்கிறதா! இது எதற்கு என்றால் நன்கு ஆழமாக தேட வேண்டும் என்றால் இதன் அருகில் இருக்கும பெட்டியில் டிக் குறியீட்டை இடவும்.

பின்னர் Start என்பதை அழுத்துங்கள். சிறிது நேரம் காத்திருக்கவும்.தற்போது தேடப்பட்ட பைல்கள் அனைத்தும் காட்டப்படும்.

இதில் தாங்களுக்கு தேவைப்படும் படங்கள் தேர்வு செய்து. பின்னர் கடைசியாக Recover என்பதை தரவும்.அவ்வளவு தான் வேலை முடிந்தது...

மென்பொருளை பதிவிறக்க கீழே உள்ள லிங்கிற்கு செல்லவும் :-
**http://download.cnet.com/Recuva/3000-2242_4-10753287.html**

# மின்குமிழ் மூலம் wifi பயன்படுத்தலாம்



இனி இன்டர்நெட் பயன்படுத்த ‘வைபை’ வசதி இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். ஒரு மின்குமிழ் போட்டால் ‘வைபை’ வசதி கிடைத்து விடும்.

அதன் மூலம் இன்டர்நெட் பார்க்க முடியும். பல காலமாக குழந்தைகளுக்கு டிஜிட்டல் பொம்மை முதல் வீடியோ கேம் வரை மின்குமிழ முதல் பட்டாசு வரை எல்லாவற்றையும் மலிவு விலையில் அள்ளிக்குவிக்கும் சீனா தான் இப்போது இந்த ‘மின்குமிழ’ மூலம் இன்டர்நெட் வசதியையும் கண்டுபிடித்துள்ளது.

ஒரு வாட் மின்குமிழை வாங்கி எரிய விட்டால் போதும், அடுத்த நொடி இன்டர்நெட்டுக்கு உயிர் வந்துவிடும். லைட்டை ஆப் செய்து விட்டால் இன்டர்நெட்டுக்கான ‘வைபை’ போய் விடும். ஒரு மின்குமிழை எரியவிட்டால நான்கு கம்ப்யூட்டர் வரைக்கும் இன்டர்நெட்டை பயன் படுத்த முடியும்.


விநாடிக்கு 150 மெகாபைட் வேகம் கொண்டதான இந்த "வைபை" குறித்து இன்னும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன. வர்த்தக ரீதியாக பயன்படுத்த முழு அளவில் தயாரிக்கப்படும் என்று இதை கண்டுபிடித்த ஷாங்காய் பல்கலைக்கழக பேராசிரியர் சிநான் கூறினார். லெட் வகை மின்குமிழில் மைக்ரோசிப பொருத்தப்பட்டிருக்கும். அதன் மூலம் அலைகற்றைகள் எழுப்பப்பட்டு, இன்டர்நெட் வசதி ஏற்படுத்தப்படுகிறது. சீனாவில் ஷாங்காயில் நவம்பர் 5 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட உள்ள சர்வதேச கண்காட்சியில் இந்த ‘வைபை’ அறிமுகம் செய்யப்படுகிறது.

வழக்கமான ‘வைபை’ வசதி, ரேடியோ அலைகளை கொண்டு ஏற்படுத்தப்படுகிறது. அதன் மூலம் இன்டர்நெட் உயிர்பெறுகிறது. ஆனால், இந்த ஒரு வாட் மின்குமிழை வைத்து சீனா, இன்டர்நெட்டை பயன்படுத்த முடியும் என்று கண்டுபிடித்துள்ளது. மலிவு விலை பொருட்களை கண்டுபிடித்து உலக நாடுகளில் சந்தையில் பெரும் மாற்றத்தை கொண்டு வந்துள்ள சீனாவின் ‘வைபை’ கண்டுபிடிப்பால் தொழில்நுட்ப புரட்சி ஏற்படும் என்று தெரிகிறது.

மேலும், உலக நாடுகளில் பலவும் இந்த வசதிக்கு மாறினால், ‘வைபை’க்கு டாட்டா காட்டும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்று கணக்கு போடுகிறது சீனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் நீர்வளமும் இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டுக்கு குடிநீர் வழங்கலும்



இரணைமடுக்குளத்திலிருந்து யாழ். குடாநாட்டின் சில பகுதிகளுக்குக் குடிநீரை வழங்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பல மட்டங்களில் நடைபெற்றதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

இத்தகைய கலந்துரையாடல்களில் சில மாவட்டத்தின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரின் முன் முயற்சி யில் மாவட்ட விவசாயிகள், மாகாண அமைச்சர்கள், அங்கத்தவர்கள், திணைக்கள தலைவர்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டதாக அச்செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய கலந்துரையாடல்கள் மிகவும் வரவேற்கப்பட வேண்டியவையே. எனினும் கலந்துரையாடல்களில் ஆக்கபூர்வமான இறுதி முடிவுகள் இக்கட்டுரை எழுதுகின்ற நேரம் வரை அடையப்படவில்லை என்பதே களயதார்த்தமாக அறியப்படுகின்றது.

இதுவரை இல்லாதவாறு ஏன் இரணைமடுக்குளத்தின் நீர் ஓர் அரசியல் மேடைக்குரிய விடயமாக மாறியுள்ளது. இரணைமடுக்குளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கு குடிநீரை வழங்குவதற்கான திட்டம் புதிய முயற்சியா?அல்லது முன்னைய முயற்சியின் தொடர்ச்சியா? ஏன் இவ்விடயம் பலரின் அக்கறைக்குரிய விடயமாக மாறியுள்ளது என்ற விடயங்களை இக்கட்டுரை பொதுமக்களின் அறிதலுக்காகத் தருவதற்கு முயற்சிக்கின்றது.

**யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளமும் அதன் முகாமைத்துவம் தொடர்பான முன் முயற்சிகளும்**

வட மாகாணத்தின் நீர் முகாமைத்துவம் மற்றும் யாழ்ப்பாண குடாநாட்டின் நன்னீர் வளத்தினைப் பாதுகாத்தல் தொடர்பான அண்மைக்கால சிந்தனைகளின்மூலம் சுமார் 350 வருடங்களுக்கு முன்பு ஒல்லாந்த ஆட்சியாளர் காலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது.

ஒல்லாந்த தளபதி கென்றில் வான் றீடில் (Cap tain Hendrile Van Reedle) கடல் வெள்ளத்தடுப்பு அணைகளை தொண்டைமானாறு மற்றும் நாவற்குழி நீரேரிகளில் அமைப்பதன் மூலம் யாழ்ப்பாண குடாநாட்டின் நன்னீர் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற சிந்தனையை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் வடமாகாண அரசாங்க அதிபர்களாக இருந்த ருவைனம் (1879), கோஸ்பேர்க்(1916) ஆகியோரால் ஆனையிறவு நீரேரி, உப்பாறு நீரேரி(நாவற்குழி) ஆகியவற்றை நன்னீர் நிலைகளாக மாற்றுவதற்கான முன்மொழிவுகள் பரிசீலனைக்கு முன்னெடுக்கப்பட்டன.

இவற்றின் தொடர்ச்சியாக 1930களில் தேசிய அரசுப் பேரவை அங்கத்தவராக இருந்த பாலசிங்கம் உவர் நீரேரிகளை நன்னீராக்க வேண்டிய தன் அவசியத்தை முன்மொழிந்தார்.

1950இல் நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்த எஸ்.ஆறுமுகம் யாழ்ப்பாணத்திற்கான நீர்வள அபிவிருத்தித் திட்டத்தை முன்மொழிந்தார். இத்திட்டம் “ஆறுமுகம் திட்டம்” எனவும் யாழ்ப்பாணத்திற்கான ஆற்றுத் திட்டம் எனவும் பிற்காலத்தில் குறிப்பிடப்பட்டது.

ஆறுமுகத்தின் திட்டத்தின் படி வடமாகாணத்தின் பெருநிலப்பரப்பில் உருவாகி வடக்கு நோக்கி ஓடும் கனகராயன் ஆற்றைப் புளியங்குளம், மாங்குளம் ஊடாக இரணைமடுக் குளத்திற்குள் நிரப்பிப் பின் மேலதிக வழிந்தோடும் நீரை ஆனையிறவு நீரேரிக்குள் சேர்ப்பதன் மூலம் ஆனையிறவு நீரேரியினை நன்னீர் ஏரியாக மாற்றுதல்.

ஆனையிறவு நீரேரியின் கிழக்குப் பகுதியினை மண் அணை மூலம் கடலிலிருந்து வேறுபடுத்திய பின்பு முள்ளியான் வாய்க்காலூடாக வடமராட்சி நீரேரியுடனும் அதன் வழியாக தொண்டைமானாறு நீரேரியுடனும் இணைத்து அவற்றினையும் நன்னீரேரிகளாக மாற்றுதல். தொண்டைமானாறு நீரேரியினை உப்பாறு நீரேரியுடன் இணைத்து அதனையும் நன்னீராக மாற்றுதல் ஆகும்.

இவ் ஆறுமுகம் திட்டம் பற்றியும் பிற்காலத்தில் யாழ் குடாநாடு எதிர்கொள்ளும் நீர் வளப்பிரச்சினை பற்றியும் உள்நாடு புலமையாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் சர்வதேச மட்டத்திலான துறைசார் நிபுணர்களும் பல்வேறு விதமான ஆய்வறிக் கைகளை வெளியிட்டுள்ளனர்.

**கூர்மையடைந்துள்ள யாழ். குடாநாட்டின் நீர்வளப் பிரச்சினை**

தற்போதைய யாழ்ப்பாண குடாநாடு யாழ்ப்பாண மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பிரதேசத்தையும் உள்ளடக்குகின்றது. 1981இன் சனத்தொகை கணக்கீட்டின் படி அண்ணளவாக 8 இலட்சம் மக்களை கொண்டதாக யாழ்.குடாநாடு காணப்பட்டது.

அக்கால கட்டத்தில் யாழ்ப்பாண குடாநாட்டின் பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரம் என கூறப்பட்ட பொருளாதாரம் சேவைத் துறையிலும் பணப்பயிர்கள் விவசாயத்திலும் மீன்பிடியிலும் முக்கியமாக கட்டமைக்கப்பட்டிருந்தது. மிளகாய் , வெங்காயம் , புகையிலை, மரக்கறி, முந்திரிகை உப உணவுப் பயிர்ச் செய்கை என செறிவான பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தமது உற்பத்தியை பெருக்கு வதற்காக கிணறுகளிலிருந்து ஏற்று நீர்ப்பாசனத்தினூடாக பெருமளவு தண்ணீரைத்தமது தோட்ட நிலங்களுக்கு பாய்ச்சினர்.

அத்துடன் அதிகளவான- செயற்கை உரங்களையும் விவசாய இரசாயனங்களையும் பயன்படுத்தினர். தொடர்ச்சியாக வலுக்கூடிய நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் அதிகளவு நீர் வெளியேற்றப்பட்டமையால் கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து வற்றியது.

இந் நிலைமையை ஈடு செய்வதற்காக தமது கிணறுகளை மேலும் ஆழமாக்கி னர். அத்துடன் ஆழ் துளைக் கிணறுகளை தோண்டி சக்தி வாய்ந்த நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் நீரை வெளியேற்றினர். இதன் காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டின் நிலத்தடி நீரின் கையிருப்பு மிக வேகமாக குறைவடைந்தது.

குடாநாட்டில் கிடைக்கக் கூடிய வருடாந்த மழைவீழ்ச்சியிலிருந்து பெறப்படும் நீர் மீண்டும் நிலத்திற்குள் சென்று சுண்ணாம்புக் கற்பாறைகளுக்குள் சேகரிக்கப்படுவதனாலேயே குடாநாட்டின் நிலத்தடி நீர் வளம் பெருகுகின்றது. வருடாந்தம் நிலத்தினுள் உட்செல்லும் நீரின் அளவை விட அதிகளவில் விவசாயத்திற்கான நீர் வெளியேற்றப்படும் போது அங்கு உருவாகும் வெற்றிடத்தைக் குடாநாட்டைச் சூழவுள்ள கடலின் உவர்நீரின் அழுத்தம் நிறைக்கின்றது.

அத்துடன் பல தசாப் தங்களாக பராமரிப்பற்று கைவிடப்பட்டிருந்த உவர் நீர்த்தடுப்பணைகள் காரணமாக தொண்டைமானாறு நீரேரி, நாவற்குழி -உப்பாறு நீரேரி, வடமராட்சி நீரேரி ஆகியவற்றினூடாக உள்வந்த கடல் நீர் அந்த நீரேரிகளினை ஒட்டிய விவசாய நிலங்களையும் குடியிருப்பு நிலங்களையும் உவர் நிலங்களாக மாற்றியது.

மறுபுறத்தில் உச்ச அளவான விவசாய இரசாயனங்களின் பாவனை காரணமாக குடாநாட்டின் நிலத்தடிநீரில் நைத்திரேற்று - நைதரசன் அளவுமட்டம் மிக வேகமாக அதிகரித்துக் காணப்பட்டது.

அளவுக்கு மீறிய இரசாயனங்களை கொண்ட குடாநாட்டின் நிலத்தடி நீரினை பயன்படுத்துவதனால் மனிதருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் ஏற்படக் கூடிய சுகாதாரக் குறை பாடுகள் பற்றி பல் வேறு ஆய்வுகள் 1970 களிலிருந்தே எச்சரிக்கைகளை விடுத்திருந்தன.

இப்பிரச்சினையின் மூன்றாவது பரிமாணமாக குடாநாட்டில் வருடாந்தம் கிடைக்கும் மழை நீரினை நிலத்திற்குள் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த பல நூற்றுக் கணக்கான குளங்களும் நீர் நிலைகளும் பராமரிப்பற்று தூர்ந்து போனதோடு பெருகி வந்த சனத்தொகையின் நிலத் தேவையை ஈடுசெய்வதற்காகவும் ஏனைய பொதுத் தேவைகளுக்காகவும் திட்டமிட்டு தூர்க்கப்பட்டு நிலத்தடி நீர் மீள் நிரப்புச் செய்யப்படுவதற்கு வாய்ப்பான சகல வழிகளும் அடைக்கப்பட்டன.



தற்போது கூர்மையடைந்துள்ள குடாநாட்டின் நீர் வளப் பற்றாக்குறைக்கு ஒட்டுமொத்த யாழ்ப்பாண குடாநாட்டு சமூகமே பொறுப்பாகும்.

இந்நிலைமை யுத்தகால இரசாயனங்களின் அதியுயர் பாவனையினால் மேலும் மோசமடைந்துள்ளது.

இத்தகைய நிலைமையில் யாழ். குடாநாட்டின் உடனடி குடிநீர்ப் பிரச்சினையின் ஒரு பகுதியினையாவது தீர்க்கும் முன்முயற்சியாகவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டிற்கு நீரெடுத்துச் செல்லும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (தொடரும்)


-ம.செல்வின்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆவது ஆண்டில் பாதம் பதிக்கிறது

# 1974-2014 கேம்பிறிஜ் கலாசாலை- நவிண்டில்

## 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியிலும் அதிகமாக பெற்றவர்கள்


சி.மகிர்தன் புள்ளிகள் -188


சி.அட்ஷியன் புள்ளிகள் -183



ஸ்ரீ.மிதுஷா புள்ளிகள் -181



சி.அபிஷேக் புள்ளிகள் -181



பா.நேருஜன் புள்ளிகள் -177



ம.திரிஷா புள்ளிகள் -172


செ.யதுர்ஷன் புள்ளிகள் -169


த.மதுஷன் புள்ளிகள் -169


ஜெ.தனுஷ் புள்ளிகள் -169


லெ.லபிஜன் புள்ளிகள் -167



ர.மகிந்தன் புள்ளிகள் -166


வி.கஸ்தூரி புள்ளிகள் -165



த.நிந்துஜா புள்ளிகள் -164


சு.செந்தூரா புள்ளிகள் -164


சி.விதுசன் புள்ளிகள் -164


சு.மதுஷன் புள்ளிகள் -163



செ.அட்சயா புள்ளிகள் -163


வி.ஜெய்னிக்காந் புள்ளிகள் -162


வி.ஜினோஷன் புள்ளிகள் -161



ப.ஆர்த்திகா புள்ளிகள் -161



ர.சயனன் புள்ளிகள் -161


பு.சுபானி புள்ளிகள் -159



க.புவிதா புள்ளிகள் -159


சு.தக்ஷா புள்ளிகள் -159


சோ.கிருஷன் புள்ளிகள் -158


சு.சாதுர்ஜன் புள்ளிகள் -157


சி.பரணிதரன் புள்ளிகள் -156


செ.நிதுஷா புள்ளிகள் -154

தரம் 05 புலமைப்பரிசில் தோற்றியோர் -85
140-153 வரை பெற்ற மாணவர்கள் - 13
101-139 வரை பெற்ற மாணவர்கள்- 32
70-100 வரை பெற்ற மாணவர்கள்-10
0-69 வரை பெற்ற மாணவர்கள்-02

தரம் 01-05 வரையான ஆசிரியர் குழாம்
தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை வளவாளர்-பா.யசிதரன்
கணிதம்- திரு. த.ரஜனிகாந், திரு. க.இலங்கேஸ்வரன்
தமிழ்- செல்வி ரேணுகா வேதவனம், திரு. க.செந்தில்ராஜா
ஆங்கிலம்- செல்வி பரமானந்தராசா திவ்யா,
திருமதி.நந்தபவான் பத்மலோஜினி
சுற்றாடல்- திரு.வி.இளையராஜா, செல்வி. ஞா.நிஷாளினி
சமயம்- திரு. ச.யோகசம்பந்தன்.

❖ ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் ஆண்- பெண் என இரு பிரிவாகக் கொண்டு வேறுபடுத்தப்பட்டுள்ளனர்.
❖ அனைத்து வகுப்புகளுக்கும் அலகு வினாக்கள், செயலட்டைகள் வழங்கப்படுகின்றன. மாதந்தோறும் நடைபெறும் அலகுப் பரீட்சையில் உயர் புள்ளி பெறும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுகின்றன.
❖ அடைவு மட்டம் குறைந்த மாணவர்களுக்கு விசேட செயலட்டைகள் வழங்கி தொடர் மதிப்பீடுகள் நடத்தப்பட்டு அடைவு மட்டத்தை அதிகரிக்கும் செயலொழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.
❖ நவீன கற்றல் சாதனங்களான மேந்தலை எறியி, கணனி மற்றும் மல்ரிமீடியா சாதனங்களூடாக கவர்ச்சிகரமான கற்பிதல் நிகழ்த்தப்படுகின்றது.
❖ தரம் 01-11 வரை விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
❖ புலமைப் பரிசில் பரீட்சைக்கு விசேட வினாத்தாள்கள் வழங்கப்பட்டு வழிகாட்டல் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன.
❖ தரம் 06-11 வரையான மாணவர்களுக்கு சனி- ஞாயிறு தினங்களில் காலை நேரத்தில் சிங்களம், கணனி வகுப்புக்கள் புலமை சார் வளவாளர்களால் நடத்தப்படுகின்றன.
❖ தரம் 10,11 மாணவர்களுக்கு முதன்மைப் பாடங்களுடன் இலக்கியநயம், புவியியல், வர்த்தகம், சுகாதாரம், குடியியல், ICT ஆகிய தொகுதிப்பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
❖ தரம் 01-05 வரையில் மல்ரி மீடியா மூலமான ஆங்கில விசேட வகுப்புக்களும் புலமைப்பரிசில் பரீட்சைக்கேற்ற நவீன கற்றல் சாதனமூடான கற்பித்தல்களும் நிகழ்கின்றன.
❖ தரம் 6 ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

## 2014 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

காலம் :- 12.12.2013, நேரம்:- பிற்பகல்:- 3.00 மணி

முக்கிய குறிப்பு:- ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தளவு மாணவர்களையே அனுமதிக்க உள்ளதால் விண்ணப்ப படிவங்களை முதலில் பெறுபவர்களுக்கே முன்னுரிமையோடான அனுமதி வழங்கப்படும்.

(466)

வடமராட்சியின் எப்பிரதேசத்திலிருந்தும் கலாசாலைக்கு வருவதற்கு வாகனவசதி தேவைப்படினும் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**கேம்பிரிஜ் கலாசாலை- முன்பள்ளி பாடசாலை 02.01.2014 அன்று ஆரம்பமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளம்பில் வைத்தியசாலை சீராக இயங்காமையால் நோயாளர்கள் அவதி

## வடமாகாணசபை உறுப்பினர் சிவமோகனிடம் முறைப்பாடு

(குருமன்காடு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து தருமாறும் அப்பகுதி மக்கள் வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பிரதேசத்தில் மத்திய மருந்தகம் ஒன்று காணப்படுகின்றது. இம்மத்திய மருந்தகத்தினையே செம்மலை, அளம்பில், நாயாறு, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இம்மருந்தகத்திற்கு தங்குமிடத்துடன் கூடிய நிரந்தரக் கட்டடம், அம்புலன்ஸ் வண்டி மற்றும் விடுதி வசதி என்பன இருக்கின்ற போதும் நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

சிங்கள வைத்தியர் ஒருவரே சில தினங்களில் சிறிய நேரம் வந்து நோயாளர்களை பார்வையிடுவதாகவும், அவ் வைத்தியரிடம் மொழிப் பிரச்சனை காரணமாக தமது நோய்களை கூறமுடியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன அவர்களிடம் கேட்டபோது, அளம்பில் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து தருமாறும் அவ் வைத்தியசாலைக்கு மின்சாரத்தினை பெற்றுத் தருமாறும் அப்பகுதி மக்கள் என்னிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இவ் வைத்தியசாலையில் நிலையான கட்டடம், தங்குமிடம், நோயாளர் விடுதி, மற்றும் நோளாளர் காவு வண்டி என்பன இருக்கின்றமையால் வைத்தியர் ஒருவரை நியமிக்க எந்த பிரச்சினையும் இருக்காது.

எனவே இது தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன், வடமாகாணசபை அமர்விலும் இது பற்றி கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-250-266)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# சமூகத்தின் சீர்திருத்தத்திற்காக செயற்படவேண்டியது அவசியம்

## மத்தியஸ்தர்களுக்கு நீதிபதி அறிவுரை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பகுதியில் ஒட்டுசுட்டான் மத்தியஸ்த சபைக்கு பின் இரண்டாவது மத்தியஸ்த சபையான கரைதுறைப்பற்று மத்தியஸ்த சபையை அங்குரார்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சி அடைவதுடன் மத்தியஸ்தர்களாக பதவி வகிப்பவர்கள் ஊழலற்றவர்களாக, பாரபட்சமற்றவர்களாக விளங்க வேண்டும் என முல்லை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபை மத்தியஸ்த சபையினை அங்குரார்ப்பணம் செய்து நியமனக் கடிதங்களை வழங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழலானது யுத்தத்தை விடக்கொடியது. அது மனிதனை அணுவணுவாக சீரழிக்கும் ஆபத்து மிகுந்த ஆயுதம். இலங்கையிலே 30 வீத பெண்களை உள்வாங்கி செயற்படும் முதல் மத்தியஸ்தசபையாக இச்சபை விளங்குகிறது.

பெண்களின் பங்களிப்பு இங்கு மிக முக்கியமானது, இந்த சமுதாயத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்களாக அனுபவம், தலைமைத்துவ பண்பும் கொண்டவர்கள் மத்தியஸ்தர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள் .யுத்தத்தினால் ஏற்பட்ட வடுக்களை ஆற்றவேண்டிய பாரிய பொறுப்பு இவர்களிடமுண்டு.

சிறு குற்றங்களை புரிந்தவர்கள் சிறுவர்களாக இருந்தால் அவர்களை பாரிய தண்டனைக்குட்படுத்தாது சீர்திருத்தத்திற்குட்படுத்தி எதிர்கால வாழ்வை வளமாக்கவும் 25 இலட்சத்திற்குட்பட்ட ஆதனங்கள் தொடர்பான வழக்குகளையும், 5ஆயிரம் ரூபா இற்கு விஞ்சாத களவுக்குற்றமாகவும் குற்றம் புரிந்தவர் 18 வயதிற்கு குறைந்தவராகவும் இருந்தால் விசாரிக்கும் நியாயாதிக்கத்தையும் மத்தியஸ்த சபை கொண்டுள்ளது.

மத்தியஸ்தர்கள் ஊழலும், பாரபட்சமும் அற்றவர்களாகவும் விளங்கி இச் சமுதாயத்திற்கு சேவையாற்ற வேண்டுமெனவும் தெரிவித்தார். (ம)

## பொதுக்கூட்டம்



வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சோமகர்ந்தன தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கடந்த கால செயற்றிட்டங்களின் பெறுபேறுகள், நிகழ்கால பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் சங்க நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-250)

## பூநகரி மகா வித்தியாலயம் கல்லூரியாக தரமுயர்வு

(பூநகரி)


பூநகரி கோட்டத்தில் ஒரு மத்திய கல்லூரி உதயமாகிறது. கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயம் என வழங்கப்பட்ட 1 ABC பாடசாலை கடந்த செப்டெம்பர் மாதம் முதல் பூநகரி மத்திய கல்லூரியாக உயர்த்தப்பட்டு கல்வி அமைச்சினால் அதற்குரிய கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

பூநகரி கோட்டத்தில் இயங்கி வந்த 27 பாடசாலைகளில் நாட்டின் போர்ச்சூழல் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில் 5 பாடசாலைகள் இதுவரை திறக்கப்படாத நிலையில் 22 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளுக்கு தாய்ப் பாடசாலையாக இருந்த பூநகரி மகா வித்தியாலயம் பூநகரி கோட்டத்தில் ஒரே ஒரு மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை மத்திய கல்லூரியாக ஆக்கவேண்டுமென கட்சி வேறுபாடுகள் இன்றி பாராளுமன்ற உறுப்பினர்களும் பாடசாலைச் சமூகமும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுத்தமைக்கு அமைவாக பாடசாலை இன்று பெருமையுடன் உயர்ந்து நிற்கிறது என பாடசாலை அதிபர் எஸ்.ஆர்.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ம-84)



முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் கலாசாரப் பெருவிழா அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ரி.குணபாலன் தலைமையில் நடைபெற்ற போது. (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடைபாதி; ஆள்பாதி
- தமிழ்ப் பழமொழி -
வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கோல உடைகளை மாற்றாதீர்கள்

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து ஆட்சியாளர்களின் செல்வாக்கு, அவர்கள் பின்பற்றிய நடைமுறைகள் சார்ந்த பார்வைகள் குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்த நாட்டின் முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவும் அவரின் மகன் டட்லி சேனநாயக்கவும் ஆங்கிலப் பாரம்பரியத்திற்கு அமைய சேட் சூட் அணிந்து ஆட்சி செய்தனர். அதன் பின்னர் ஆட்சி பீடத்தில் அமர்ந்த சிங்களத் தலைவர்கள் தேசிய உடை அணிவதில் அதீத கவனம் செலுத்தினர்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்க வேட்டி, நசனல், சால்வை என்ற கோலத்திலேயே தன்னை சிங்களத் தலைவராக அடையாளப்படுத்தி இருந்தார்.

அந்தக் காலத்தில் வெளிவந்திருந்த ஐம்பது ரூபாய் நாணயத்தாளில் பண்டாரநாயக்க கை உயர்த்தியவாறு இருக்கின்ற புகைப்படம் வெளிவந்திருந்தது. அதில் பண்டாரநாயக்க நசனலும் சால்வையும் அணிந்திருக்கும் புலக்காட்சி இப்போதும் ஞாபகத்தில் வரும்.

இது போல ஜே. ஆர்.ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜயதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் தங்கள் தேசிய உடையை அணிவதில் மிகவும் உறுதியாக இருந்தனர்-இருக்கின்றனர்.

இதில் மிகவும் கவனிக்க வேண்டிய விடயம் மேற்குறிப்பிட்ட சிங்கள ஆட்சித் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற போதும் ஐ.நா சபை உள்ளிட்ட சர்வதேச பொது அமைப்புகளில் உரையாற்றுகின்ற போதும் தங்களின் இன அடையாளத்தைக் காட்டும் வகையில் வெண்மை நிறத்திலான நசனல் வேட்டி அணிந்து தங்கள் தேசியத்தை நிலைநிறுத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியில் ரணில் விக்கிரமசிங்கவின் ரவுசர்க் கலாசாரமும் கணிசமான வகிபங்கை செலுத்தியுள்ளது என்று நாம் நினைப்பதுண்டு.

தேசிய உடையில் தங்கள் ஆட்சித் தலைவர்களை அடையாளப்படுத்திக் கொண்ட சிங்கள மக்களால் ரணில் விக்கிரமசிங்க போன்ற ரவுசர் அணியும் கலாசாரம் உடையவர்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால், இந்த நாட்டின் ஆட்சித் தலைமை சிங்கள தேசிய உடை அணிந்தவர்களுக்கானதாகவே இருக்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

சிங்கள ஆட்சித் தலைமைகளிடம் இருக்கக் கூடிய இறுக்கமான தேசிய உடைக் கலாசாரம் எம் தமிழ் இனத்தின் அரசியல் தலைமைகளிடமும் இருக்கவேண்டும்.

ஆனால் நாங்கள் ஒருதடவை வேட்டி, நசனல், சால்வை என்ற கோலத்தில் தோன்றுவோம். மறுதடவை ரவுசர், சேட் என்று மாற்றிக் கொள்வோம். இத்தகைய மாற்றங்கள் தனித்து உடை மாற்றத்தை மட்டும் குறிப்பிடுவதாக இல்லை.

மாறாக, இது தமிழ் அரசியல் தலைவர்களின் மனமாற்றங்களையும் உறுதி அற்ற தன்மைகளையும் வெளிப்படுத்துவதாக அமையும்.

எனவே எதிர்காலத்திலேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போன்றவர்கள் தமிழ்த் தேசிய உடையில் தங்கள் பிரசன்னத்தை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசிய உடையில் தமிழ்த் தலைவர்கள் தங்களை அடையாளப்படுத்தும் போது அது இளம் சமூகத்திடம் அரசியல் சார்ந்த தலைமைத்துவப் பண்பில் ஆர்வத்தையும் ஈர்ப்பையும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

# மன்மோகன் யாழிற்கு வருகிறாரா? எமக்கு எதுவும் தெரியாது

## அரசாங்கம் தெரிவிப்பு

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் யாழ்ப்பாண விஜயம் குறித்து தெரியாது என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளமை தொடர்பில் அரசாங்கத்திற்கு இதுவரையில் அறிவிக்கவில்லை.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அண்மையில் தெரிவித்திருந்தார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் அழைப்பிற்கு அமைய இந்திய பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

எவ்வாறெனினும், இந்திய பிரதமரின் விஜயம் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்காதமை துரதிர்ஷ்டவசமானது.

பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியை பார்வையிடும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார். பிரதமர் அமர்வுகளில் பங்கேற்றிருந்தால் அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கும்.

வடக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பிரதமர் நேரில் பார்வையிட்டிருக்க சந்தர்ப்பம் கிட்டியிருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசளிப்பு

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டிய ஆக்கத்திறன் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**மாணவர்களுக்கானது**

**சித்திரம்**

வசீகரகுலம் தசீபன் (இணுவில் மத்திய கல்லூரி), வரதலிங்கம் கஜீபன் (இணுவில் மத்திய கல்லூரி), கிருஸ்ணகுமார் பிருந்தாவன் (ஹாட்லிக் கல்லூரி)

**கட்டுரை**

சுவேந்திரன் ஆர்த்திகா (வேம்படி மகளிர் பாடசாலை), சி.லதாங்கி (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), மீரா குபேந்திரமூர்த்தி (இணுவில் இந்துக் கல்லூரி)

**சிறுகதை**

சு.சோபிகா (தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி), மு.பாவலன் (ஹாட்லிக் கல்லூரி), சு.துசாந்தி (மெதடிஸ்த பெண்கள் பாடசாலை)

**கவிதை**

இ.கிருத்திகா (புற்றளை மகா வித்தியாலயம்), சிவானந்தம் கோமகன் (புற்றளை மகா வித்தியாலயம்), ச.குகதாசன் (ஹாட்லிக் கல்லூரி)

**சிறப்புப்பரிசு**

க.பிரதீப் (இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய மகா வித்தியாலயம்)

**திறந்த பிரிவு**

**சித்திரம்**

திருமதி சிவதர்சினி கோகுலன் (கந்தன்பதி வரியப்புலம்), யு.சஞ்சீவ் (சங்கர் லேன், சாவகச்சேரி), சிவராஜன் சிவராகவன் (நந்தினி வாசா, உடுவில் மேற்கு, சுன்னாகம்)

**கட்டுரை**

மீனலோஜினி (உருத்திரபுரம்), வி.விஸ்ணுகரன் (சுன்னாகம்)

**சிறுகதை**

கயூரியா தர்மதாச ( கீரிமலை வீதி, சண்டிலிப்பாய்), சிவராஜன் சிவராகவன் (உடுவில் மேற்கு, சுன்னாகம்), கு.மைத்திரேஜி(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

**கவிதை**

யசிந்தா கந்தசாமி (கொக்குவில் மேற்கு), கயூரியா தர்மதாச (கீரிமலை வீதி, சுன்னாகம்), பா.மாசிலாமணி (முக்கனிச்சோலை முள்ளியவளை),

**சிறப்புப் பரிசு**

சத்தியசீலன் லவர்ணியா (ஆரையம்பதி)

இவர்களுக்கான பரிசளிப்பு விழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன. (அ)

## இஸ்லாம் ஆன்மிக சிந்தனை

### மிகச்சிறந்த செல்வங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள். இறைவனை நினைவுகூரும் நாவு, இறைவனுக்கு நன்றி செலுத்தும் உள்ளம், இறைவழியில் நடந்திட கணவனுக்கு உதவிடும் இறை நம்பிக்கையுள்ள மனைவி இவையே அனைத்தையும் விடச்சிறந்த செல்வங்களாகும். (நூல்: திர்மதி)



## வெள்ளி நற்சிந்தனை

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

காலம் நகர்ந்து கொண்டிருப்பது அந்த நகர்வை இயற்கைத் தோற்றங்கள் எமக்குக் காட்டி நிற்கும். ஆனால் இப்போது காலத்தின் கிடப்பை இயற்கைத் தோற்றம் கொண்டு உணரும் பண்பாடு மாறிவிட்டது. இடப்பெயர்வும் புலப்பெயர்வும் பண்பாட்டு நிலையில் பல குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக வழிபாட்டு நடைமுறைகளில் பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. ஆனால் இம்மாற்றங்களைக் காலத்தால் ஏற்பட்ட மாற்றமென எல்லோரும் இயம்புகின்றனர்.

அப்பர் பெருமான் காலத்தின் நகர்வைப் பற்றி ஒரு பாடலிலே குறிப்பிட்டுள்ளார். சைவசமய வாழ்வியலைப் பின்பற்றிய அப்பர் சமண வாழ்வியலைத் தழுவி வேறிடம் பெயர்கிறார். நீண்டகாலம் அங்கே சமணநெறிகளைப் பின்பற்றி வாழ்கிறார். மீண்டும் திரும்பிவந்து சைவத்தைத் தழுவி வாழ்கிறார். அப்போதுதான் காலத்தை வீணே கழித்ததை நன்குணர்கிறார். தொண்டு வாழ்வியலை மறந்து விட்டதையும் உணர்கிறார்.

கோயில் வழிபாட்டிலே பங்கேற்காமல் காலத்தைக் கழித்ததை எண்ணி அவர் கவலையுற்றதைப் பாடலிலே பதிவு செய்துள்ளார். இறைவனுக்கு நீராட்டி அலங்காரம் செய்யும் காட்சியை நேரில் காணாமற் காலத்தைக் கழித்ததை எண்ணி வருந்துகிறார். எனவே அக்காட்சியினை எல்லோரும் காணச் சொல்லோவியமாக்கியுள்ளார். தூய காவிரி நீரிலே முதலில் இறைவனுக்கு நீராட்டும் போது இருக்கு வேதத்தை ஓதியே நீராட்டுகின்றனர். குங்குமக் குழம்பைத் திருமேனியெங்கும் சாத்துகின்றனர். இண்டைமாலையை அழகுறப் புனைகின்றனர். அவ்வாறு திருக்கோலம் கொண்ட இறைவனைக் காணாமல் இருந்தமையால் காலம் பயனின்றிக் கழிந்ததையே எண்ணுகிறார். அவர் பதிவு செய்திருக்கும் இறைவனை நீராட்டும் நடைமுறை இன்று வரையும் நிலை பெற்றுள்ளது.

இறைவனை நீராட்டும்போது வணங்குவது மிகவும் பயன்தரும். கோயில் ஆற்றங்கரையை அடுத்திருப்பதால் அந்நீரையே நீராட்டுவதற்குப் பயன்படுத்தும் நடைமுறையிருந்தது. ஆனால் ஆறு இல்லாத கோயில் கட்டும் இடத்திலே கேணி அமைக்கப்பட்டது.

இல்லாவிடில் கிணறு தோண்டப்பட்டது. அவற்றிலே உள்ள நீர் தூய்மையானதெனக் கருதப்பட்டது. ஆனால் இப்போது அத்தகைய நம்பிக்கை இல்லை. கோயிலும் களையும் மக்கள் மனதிலே ஒரு சுற்றுலா உணர்வையே ஏற்படுத்துவதாக உள்ளது. ஐம்பூதங்களிலே ஒன்றான நீரின் ஆற்றலை யாரும் நினைப்பதில்லை. எதிர்காலத்திலே உருவ வழிபாடு தேவையில்லை என்ற நிலைகூட உருவாகலாம். ஏனைய பல சமயங்கள் உருவ வழிபாடு தொடர்பற்றவனாக உள்ளன. ஆனால் அப்பர் போன்ற முதிர்ந்த அனுபவம் உள்ளவர்கள் வழிபாட்டு நடைமுறைகளை மறந்து பல காலம் இருந்ததை எண்ணி வருந்தியது போல எமது தலைமுறையினரும் வருந்தாமல் இருப்பதற்கு நாம் ஏற்றது செய்ய வேண்டும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எனவே கோயில் வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய தெளிவை இளம் தலைமுறைக்கு ஏற்படுத்த வேண்டும். இந்நடைமுறைகளிலே சமூகத்தவரது பங்களிப்பு எவ்வாறு உருவாக்கம் பெற்றுள்ளதென்பதையும் மனித நேயப் பண்பு நிலையின் வளர்ச்சியையும் தெளிவாக்க வேண்டும். ஏற்ற காலத்திலே இப்பணியை எல்லோரும் இணைந்து செய்ய முன்வரவேண்டும்.

தொண்டனேன்பட்ட தென்னே
தூய காவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டிக்
குங்குமக் குழம்பு சாத்தி
இண்டை கொண்டேற நோக்கி
யீசனையெம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே
காலத்தைக் கழித்தவாறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கலில் வாழ்க்கை தொடர்பான அருங்காட்சியம் திறக்கிறார் ரொனால்டோ

போர்த்துக்கல் தீவான மடெய்ராவில் தனது விளையாட்டு வாழ்க்கை தொடர்பான ஒரு அருங்காட்சியகத்தைத் திறக்க இருப்பதாக அந்நாட்டு காற்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்தார்.

28 வயதான இந்த ரியல் மாட்ரிட் அணியின் வீரரின் வெற்றிகரமான விளையாட்டு வாழ்க்கை கடந்த 1990 ஆம் ஆண்டு இங்கிருந்துதான் தொடங்கியது.

உலகக் காற்பந்து வீரர்களில் சிறந்தவர்களுள் ஒருவரான கிறிஸ்டியானோ தனது தந்தை வேலை செய்துவந்த உள்ளூர் விளையாட்டு மையத்தின் எப்சிஅன்டோரின்ஹா அணியில் தான் முதன்முதலில் விளையாடத் தொடங்கினார்.

12 வயதில் லிஸ்பனுக்கு சென்ற அவர் தனது 18 ஆவது வயதில் மான்செஸ்டர் யுனைட்ட் அணியினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் தனது சர்வதேச விளையாட்டு வாழ்க்கையைத் தொடங்கினார்.

மடெய்ரா தீவின் தலைநகரான ஃபுன்சலுக்கு தனது தாய் மற்றும் தனது இளைய மகனுடன், அருங்காட்சியக தொடக்க திட்டங்களைப் பார்வையிட வந்திருந்த கிறிஸ்டியானோ இந்தத் தகவல்களைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.



எதிர்வரும் 15 ஆம் திகதி இந்த அருங்காட்சியகம் பொதுமக்களின் பார்வைக்குத் திறக்கப்படும் என்றும் அவர் கூறினார். காற்பந்துகள், புகைப்படங்கள் மற்றும் கோப்பைகள் போன்று அவரது விளையாட்டு வாழ்க்கையின் வெற்றிக்குத் தொடர்புடைய பொருட்கள் அங்கு இடம்பெறும் என்றும் கிறிஸ்டியானோ அறிவித்தார்.

உலக காற்பந்து சம்மேளனத்தின் சிறந்த வீரர் விருதை கடந்த 2008 ஆம் ஆண்டில் பெற்ற கிறிஸ்டி யானோ ரொனால்டோ அதன்பின் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் விளையாட்டில் லியோனெல் மெஸ்ஸியிடம் அதனை இழந்துள்ளார்.

இந்த ஆண்டு விருதினைப் பெறுவதை தனது நோக்கமாக இவர் குறிப்பிட்டாலும், வெற்றியின் போது தனக்கான ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று மட்டுமே கூறியுள்ளார்.

## மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை



(யாழ்ப்பாணம்)

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படடும் கரப்பட்டதாட்ட "சி" மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

மேற்படி பரீட்சைக்கான அடுத்த வகுப்புக்கள் நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஆகிய தினங்களில் முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளன.


மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் அனைவரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சுரேஸ் குமார் அறிவித்துள்ளார்.

## கல்லூரி போட்டிகளில் 15 வீரர்கள் ஆட வேண்டும்

### சச்சின் வேண்டுகோள்

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற டெண்டுல்கருக்கு மும்பை கிரிக்கெட் சங்கம் சார்பில் நேற்று முன்தினம் பாராட்டு விழா நடந்தது. இந்த விழாவில் டெண்டுல்கர் பேசியதாவது,

இளம் வீரர்களுக்கு அதிகமான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். ஐ.பி.எல் போட்டியை அறிமுகப்படுத்தியதன் மூலம் சிறிய நகரங்களில் கிரிக்கெட் வேகமாக பரவியது. இன்று சிறிய நகரங்களில் இருந்து ஏராளமான வீரர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள்.



மும்பை கிரிக்கெட் சங்கத்திற்கு நான் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். பள்ளி -கல்லூரிகள் இடையேயான போட்டிகளில் 11 பேருக்கு பதிலாக 15 வீரர்களை விளையாட அனுமதிக்க வேண்டும். ஏனென்றால் நீண்ட தூரத்தில் இருந்து பயணம் செய்துவரும் வீரர்கள் தங்களுக்கு வாய்ப்பு கிடைக்குமா? என்று உறுதியாக தெரியாத நிலையிலுள்ளனர்.

சில வீரர்கள் ஒரு வருடமாக ஆடியும், பள்ளிகள் போட்டியில் வாய்ப்பை பெற முடியவில்லை. ஒவ்வொரு வீரருக்கும் தங்களது திறமையை நிரூபித்துக்காட்ட குறைந்த பட்சம் 3 போட்டியில் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அந்த வீரர் சிறந்தவராக உருவாகும்போது மும்பை கிரிக்கெட் சங்கம் ஆதரவுக் கரம் நீட்டவேண்டும்.

## சிநேகபூர்வ காற்பந்துப் போட்டி; யாழ்.சென்ஜோன்ஸ் வெற்றி

(மானிப்பாய்)

யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணிக்கும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் இடையில் நடைபெற்ற நட்பு ரீதியிலான காற்பந்தாட்ட போட்டியில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணி வெற்றி பெற்றுள்ளது.




இப்போட்டி யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது. யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் காற்பந்தாட்ட அணி 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் அணியைவென்றது.

இந்த காற்பந்தாட்ட போட்டியானது இரு பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கிடையில் நட்புறவை வளர்க்கும் நோக்கில் வருடாவருடம் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (23)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க தலைவராக சிவசங்கர் தெரிவு

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராக செ.சிவசங்கர் தெரிவு செய்யப்பட்டார். இந்தச் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக தெரிவு மேற்கொள்வதற்கான கூட்டம் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவராக செ.சிவசங்கர் தெரிவு செய்யப்பட்டார். இந்தச் சங்கத்தின் உப தலைவர்களாக ஆர்.செல்வராஜா, ப.முருகவேல், என்.ரவீந்திரா, கோ.கோபிகிருஷ்ணா, எஸ்.சிவச்செல்வன் ஆகியோரும் செயலாளராக ரி.றொபேசனும் பொருளாளராக ந.சிவராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.



இதற்கு மேலதிகமாக ரி.கிருபாகரன், வை.நிஷந்தன், ஆர்.ஸ்ரீதரன், எம்.சிதம்பரப்பிள்ளை, பி.வசீகரன் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் கணக்காய்வாளராக ந.சுதேஸ்குமார், எஸ்.கோகுலன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்; துணுக்காய் பி.செயலகம் வெற்றி

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை துணுக்காய் பிரதேச செயலக அணி கைப்பற்றியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் உடுப்புக்குளம் அலை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் துணுக்காய் பிரதேச செயலக அணியும் கரைதுரைப்பற்று பிரதேச செயலக அணியும் மோதின.

ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய துணுக்காய் பிரதேச செயலக அணி 2 :1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.



## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 13 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். துரையப்பாவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியை வீழ்த்தி தெ.ஆபிரிக்கா அபார வெற்றி

**டி ஹொக் அதிரடிச் சதம்**

தென்னாபிரிக்க அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில், இந்திய அணி 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் ஒருநாள் போட்டி, ஜொகன்னஸ்பேர்க் நியூ வொண்டரர்ஸ் மைதானத்தில் நேற்று பகல்இரவு ஆட்டமாக நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீசியது. அந்த அணியின்




குயின்ரன் டி ஹொக் சிறப்பாக விளையாடி சதம் அடித்து அசத்தினார். இறுதியில் அணித்த லைவர் டி வில்லியர்சுடன் இணைந்த டுமினி, இந்திய பந்துவீச்சை தவிடு பொடியாக்கினார்.

சிக்ஸரும் பவுண்டரியுமாகப் பறக்கவிட்ட அவர் 25 பந்தில் அரை சதம் அடித்தார். தென்னாபிரிக்கா 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 358 ஓட்டங்களை குவித்தது. டுமினி 59 ஓட்டங்களுடனும் (29 பந்து, 2 பவுண்டரி, 5 சிக்சர்), மில்லர் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பதிலுக்கு 50 ஓவரில் 359 ரன் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந்தது.

தென்னாபிரிக்கா வீரர்களின் பந்துவீச்சை தாக்குபிடிக்க முடியாமல் சீரான இடைவெளியில் இந்திய வீரர்கள் ஆட்டமிழந்தனர். இறுதியில் இந்திய அணி 41 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 217 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து படுதோல்வி அடைந்தது. மார்பகப் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தென்னாபிரிக்க வீரர்கள் வெளிர்ரோஜா வண்ண (பிங்க்) சீருடை அணிந்து களமிறங்கினர்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டி ஹொக் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2-வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட்போட்டி எதிர்வரும் 8-ம் திகதி நடைபெற உள்ளது.




# ஆஸி, இங்கிலாந்து போராட்டம்

**ஆஷஸ் டெஸ்ட்**

இங்கிலாந்துக்கெதிரான ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்டில் முதல்வரிசை வீரர்களை இழந்த அவுஸ்திரேலிய அணி திணறல் தொடக்கம் அளித்தது.


அவுஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி பாரம்பரியமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் வென்ற அவுஸ்திரேலிய அணி 1-0 என முன்னிலையில் உள்ளது.

இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் அடிலெய்டில் நேற்று தொடங்கியது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

போட்டி தொடங்கும் போது மழை குறுக்கிட்டதால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. அவுஸ்திரேலிய அணிக்கு வார்னர் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின் இணைந்த ரோஜர்ஸ், வாட்சன் ஜோடி பொறுப் பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் அரைசதம் கடந்தனர்.

இரண்டாவது விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் பகிர்ந்தது. எனினும் 2-வது, 3-வது, 4-வது விக்கெட்டுக்கள் 19 ஓட்ட இடை வெளியில் வீழ்த்தப்பட்ட அவ்வணி தடுமாறியிருந்தது. 5-வது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்கள் பகிரப்பட்டு அவ்வணி போராடும் நிலையை ஏற்படுத்தியது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய அணி சார்பாக கிறிஸ் றொஜர்ஸ் 72 ஓட்டங்களையும், ஜோர்ஜ பெய்லி



53 ஓட்டங்களையும், ஷேன் வோட்சன் 51 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங் களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 2 விக்கெட்டுகளையும், கிறேம் ஸ்வான், மொன்றி பனசர், ஜேம்ஸ் அன்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# வரதராஜப் பெருமாள் கோவில் திருட்டு

# முழுமையான விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் குறித்த விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளமை தொடர்பில் முன்னாள் வலி வடக்கு பிரதேசசபை தலைவர் லோகநாதனினால் ஜனாதிபதியின் கவனத் திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே ஜனாதிபதியால் மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க இவ்வாலயத்தில் கடந்த ஒக்ரோபர் மாதம் 2-ம் திகதி 150 பவுண் தங்க நகைகள், வெள்ளி அங்கிகள் உட்பட ஒரு கோடி ரூபா பெறுமதியான ஆலய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன், ஆலய கதவுகள் உடைக்கப்பட்டு ஆலயத்தை அவமதிக்கும் முறையிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆலயத்தின் மடப்பள்ளி கூரை வழியாக உள்நுழைந்த கொள்ளைக் கூட்டம் ஒன்றே இவ்வாறு கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதென சந்தேகிக்கப்பட்ட போதும் இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த மூன்று மாதங்களாக கிடப்பிலேயே போடப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த முன்னாள் வலி வடக்கு பிரதேச சபை தலைவர் இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் வழக்கு விசாரணைகள் தொடரப்படாமை பிரதேச மக்களிடையே பொலிஸார் மீது சந்தேகங்களை தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இதையடுத்து பொலிஸ்மா அதிபரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பணிப்புரை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-5)

# ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து கமல் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக பொறுப் பேற்றிருந்தவருமான கந்தசாமி கமலேந்திரனை கட்சியிலிருந்து இடைநிறுத்துவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சி.தவராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் எமது கட்சியின் மூத்த உறுப்பினரும் நெடுந்நீவு பிரதேச சபையின் தலைவருமாகிய தோழர் டானியல் றெக்சியன் (ரஜீவ்) படுகொலை செய்யப்பட்டிருப்பதனை மருத்துவமனை ஆதாரங்களை வைத்து நீதிமன்ற விசாரணைகள் நடந்துவருகின்றன.

ஈவிரக்கமற்ற இப்படுகொலை குறித்து சந்தேகத்தின் பேரில் எமது கட்சியின் உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரன் கைதாகி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார். நீதிமன்ற விசாரணையில் இருக்கும் இவ்விடயம் குறித்து நாம் தற் போது எவ்வித கருத்துக்களும் கூற முடியாது.

ஆனாலும் இது குறித்து எமது மக்களுக்கு நாம் கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். வன்முறைகள், அச்சுறுத்தல்கள், மற்றும் படுகொலைகள் போன்ற ஜனநாயக விரோத செயற்பாடுகளால் எமது மக்கள் கடந்த காலங்களில் பேரவலங்களையே சந்தித்து வந்திருக்கின்றார்கள்.

இது போன்ற படுகொலை சம்பவங்களை எமது கட்சியின் தலைமை ஒரு போதும் அனுமதித்திருந்ததும் இல்லை. நியாயப்படுத்தியிருந்ததும் இல்லை. கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான முரண்பாடுகள் எந்த கட்சிக்குள்ளும் இல்லாமல் இல்லை. ஆனாலும் அப்படியான முரண்பாடுகள் கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டே தீர்க்கப்படல் வேண்டும்.

தோழர் டானியில் றெக்சியன் (ரஜீவ்) படுகொலையானது தனிப்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவே நடந்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது.

தோழர் டானியில் றெக்சியன் (ரஜீவ்) படுகொலை குறித்த கொலையாளிகள் யார் என்பது தொடர்பாக நீதிமன்ற விசாரணைகள் முடிந்து தீர்ப்புவழங்கப்படும் வரை எமது கட்சியின் உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரனை கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து இடைநிறுத்தி வைக்க கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்திருக்கிறது.

எமது கட்சியின் கட்டுப்பாட்டு விதிகளில் இருந்துமீறு வோர் எவராயினும் கட்சியில் இருந்து நிரந்தரமாகவே விலக்கப்படுவார்கள என்பதையும், சமூக விரோத செயல்களை யார் செய்தாலும் அவர்கள் பாகுபாடின்றி சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையும், நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகர சபையில்...

யன் ரூபாவும் மொத்த செலவுகள் 520 மில்லியன் ரூபாவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

செலவினங்களில் முக்கிய விடயங்களாக வீதிகள் புனரமைப்பதற்கு 8 மில்லியன் ரூபாவும், வடிகால்கள் அமைபதற்கு 7 மில்லியன் ரூபாவும், சந்தைகள் புனர்நிர்மாணம் செய்ய 2.5 மில்லியன் ரூபாவும், நீர் விநியோகம் மேற்கொள்ள 6.5 மில்லியன் ரூபாவும், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பிற்கு 16 மில்லியன் ரூபாவும் கூறப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபையின் எதிர்கட்சியினர் இந்த வரவு - செலவுத் திட்டத்தினை எதிர்த்ததுடன், சென்ற வருடத்தைப் போன்று இவ்வருடமும் எட்ட முடியாத வருமானத்தினை பெறப்போவதாக வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதுபோன்று ஆளும்கட்சியின் சில உறுப்பினர்கள் சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து வரவு - செலவுத் திட்ட அறிக்கையினை மறுபரிசீலனை செய்யுமாறும் வேண்டுகோள்விடுத்தனர்.

இதேவேளை வரவுசெலவுத் திட்டத்தை வாக்கெடுப்புக்கு விடுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களினால் விடப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது ஆதரவாக 12 வாக்குகளும் எதிர்த்து 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்நிலையில் 7 மேலதிக வாக்குகளினால் பட்ஜெட் நிறைவேறியது.

இதேவேளை கடந்த காலத்தில் தம் மால முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லையெனவும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. (செ-6)

## சிங்களக்...

டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் எடுத்துக்கூறியுள்ளனர். குறிப்பாக முல்லைத் தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னர் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு அரசாங்கம் பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இதனால் முல்லைத்தீவு இன்னும் சில ஆண்டுகளில் சிங்கள மாவட்டமாக மாறும் அபாயம் ஏற்படும் என்றும் அவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

கொக்குளாய் பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட சில தென்னிலங்கை மீனவர்களுக்கு மட்டுமே தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு கடற்தொழில் சமாசம் அனுமதி வழங்கியுள்ளது. இங்கு பெருமளவான மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளையும் பயன்படுத்தி தொழில் செய்து வருவதால் கடல்வளம் அழிவடையும் நிலையும் காணப்படுகின்றது.

அத்தோடு வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் வெலிஓயா பிரதேசத்தில் பெருமளவான சிங்கள மக்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கையும் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிவில் சமூகத்தினர் அமெரிக்கத்தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்தனர். (செ-6)

## 292 வர்த்தகர்களிடம்...

எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த மூன்று மாதங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சோதனைகளில் செப்டெம்பர் மாதம் 50 வர்த்தகர்களிடம் ஒரு இலட்சத்து 51 ஆயிரம் ரூபாவும் ஒக்டோபர் மாதம் 76 வர்த்தகர்களிடம் 3 இலட்சத்து 37 ஆயிரம் ரூபா தண்டமும் நவம்பர் மாதம் 166 வர்த்தகர்களிடம் 6 இலட்சத்து 40 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவலக அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலக அதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-6,4)

## பால்மா, காஸ்...

இதனால பால்மா உற்பத்தி நிறுவனங்கள் பொதி செய்யப்பட்ட பால்மா பக்கெற்றுக்களை பதுக்கி வைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இந்த செயற்பாட்டின் மூலம் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப் பகுதியில் பால்மாக்களின் விலைகளை அதிகரிக்க பால்மா உற்பத்தி நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

வெலிசர பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி பொதி செய்யப்பட்ட பால்மா பக்கெற்றுக்கள் நேற்று கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது போன்று இன்னும் பல இடங்களில் பொதி செய்யப்பட்ட பால்மா பக்கெற்றுக்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்றும் இவை விரைவில் கண்டு பிடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பால்மா தட்டுப்பாடு மற்றும் பால்மா பக்கெற்றுக்களை பதுக்கி வைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் பற்றி 011-2399146 அல்லது 0717220444 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தனக்கு அறிவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டின் பல பாகங்களில் பால்மாக்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, காஸ் விலைகளிலும் எவ்விதமான மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

## வட, கிழக்கில்...

கடைபிடிக்கப்படும். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் 16 நாள் செயல் பிரசார நடவடிக்கையையொட்டி இந்தப் பேரணிகள் நடத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கு உட்பட இலங்கையில் பெண்கள் மீதான வன்முறையானது, மக்களின் வாழ்க்கையையும், சமூக அபிவிருத்தியையும் பாதிக்கின்ற ஒரு பெரிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வடகிழக்கில் உள்ள அம்பாறையில் 19 வன்முறைகளும், மட்டக்களப்பில் 37, வவுனியா 46, மன்னார் 49, முல்லைத்தீவு 10, கிளிநொச்சி 09, யாழ்ப்பாணம் 44 என மொத்தம் 214 பாலியல் வன்முறை சம்பவங்கள் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பெண்கள் செயற்பாட்டு அமைப்புக்கள் தெரிவித்திருக்கின்றன.

பாலியல் குற்றங்களையும், குற்றவாளிகளையும் பகிரங்கப்படுத்தும் வகையில் ஒவ்வொரு சம்பவத்திலும் பாதிக்கப்பட்ட பெண்களும், சிறுமியரும் அணிந்திருந்த ஆடைகளை, அந்த சம்பவங்கள் பற்றிய விபரக் குறிப்புடன் பேருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் இந்தப் பேரணிகளின்போது காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் குறிப்பாக ஆண்களினதும், ஒட்டுமொத்தமாக சமூகத்தினதும் கவனத்தை ஈர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் ஊடாக பெண்களுக்கு எதிரான பாலியல் மற்றும் வன்முறைகளை இல்லாதொழிப்பதற்குத் தாங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பெண்கள் செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். (செ-11)

## கோடரி வெட்டு...

நாதன் ஞானேஸ்வரி (வயது 48), சண்முகநாதன் யதுர்ஷன் ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி வீட்டில் கடந்த சிலமாதங்களுக்கு முன்னரும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-4,6)

## இந்தியாவின் அழுத்தம்...

யுத்தத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் நலன்களை உறுதி செய்யும் நோக்கில் மத்திய அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது அமெரிக்கா சமர்ப்பித்த தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்துள்ளது.

இதனால் இலங்கை மீது இந்திய மத்திய அரசாங்கம் அனுதாப போக்கைப் பின்பற்றாது.

13-ம் திருத்தச் சட்டத்தை நீர்த்துப்போக இந்தியா அனுமதிக்காது.

இரு நாடுகளின் மீனவர்களுக்கு இடையில் சந்திப்பு ஒன்றை நடத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)


### காணி விற்பனைக்கு

நெல்லியடி, கரவெட்டி வடக்கு கொடிகாமம் வீதியில் பழைய தபாற்கந்தோருக்கு சற்று முன்னதாக எதிர்புறத்தே உள்ள 10அடி அகலம் கொண்ட பாதையுடைய பிரதான வீதியிலிருந்து 150 அடி தூரத்தில் உள்ள புதிதாக நான்கு பக்கமும் மதில் கட்டப்பட்ட 1 3/4 பரப்பு சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு. ஒருபரப்பு 15 இலட்சம்.

தொடர்பு:

0770267711

(C-5671)

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

25வது வருட கல்விச் சேவையில்....

### புதிய நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

புதிய கல்வியாண்டு - 2013

தரம் 1 முதல் O/L வரை

ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி

அனுமதிகள் இன்று முதல்...

### விற்பனைக்கு

41 – XXXX இசூஸ் லொறி

27 – XXXX இசூஸ் லொறி

HG - XXXX சுப்பர் டஸ்கர் லேடன்

உடன் விற்பனைக்குண்டு. அத்துடன் 3/4 பரப்பு சீற்போட்ட லொறி பாக்பண்ணக் கூடிய இடமும் (49, புதிய சிவன் வீதி, நல்லூரில்) உண்டு.

தொடர்பு : 0779722621 0771629330

(4645)

தரம் 6 முதல் O/L ற்கு

யாழ் நகரின் No: 1 கல்வி நிறுவனம்

### எடிசன் அக்கடமி

யாழ் | கலட்டி | நல்லூர் | கொக்குவில் | வட்டுக்கோட்டை | சுன்னாகம்

புதிய கல்வி ஆண்டு 2014

தரம் 6 முதல் O/L வரை

(தமிழ் மொழி மூலம் & English Medium)

ஆரம்பம்

09/12/2013 திங்கட்கிழமை

### சிவந்த மேனியராக மாற விளையும் உங்கள் எண்ணம் ஈடேற

குளுமை மிக்க பொன்னான தேசம்....

பல இலட்சம் எங்கள் உறவுகள், எங்கள் தமிழர் கலாசாரம் போற்றிக் காக்கப்படும்....

### வளம் மிக்க கனடா தேசத்தில் நீங்களும் படித்து உழைக்க

கனடா சென்று சிவந்த மேனியராகும் உங்கள் எண்ணம் நனவாக்க நாங்கள் இருக்கிறோம். நம்பி வாருங்கள்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விசேட ஆலோசனைகளும் 30% கட்டணக் கழிவுகளும் உண்மையிலேயே வழங்கப்படும். விரைந்து வாருங்கள்.

முன்னர் எம்மோடு இது பற்றிப் பேசியவர்களும் சில நிபந்தனையோடு மீண்டும் இலவசமாகவே எம்மோடு கருத்துப் பரிவர்த்தனை செய்யலாம்.

(C-5675)

### திசைகாட்டி பிறைவேற் லிமிட்



175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 221 9016, 021 568 9090

www.thisaivisa.com

wish wickramarachchi institute of speech & hearing | Cochlear

- நீங்கள் இந்த உலகத்தில் இருந்து அமைதியாக ஒதுங்கி இருக்கிறீர்களா?
- உங்களுடைய கேட்டல் சாதனங்களின் உதவியுடன் கேட்பது கடினமாக உள்ளதா?

**நீங்கள் இனி கவலைப்பட வேண்டாம்!**

Wickramarachchi Institute of Speech and hearing நிறுவனத்தால் இலவசமாக நடத்தப்படும் செவிப்புலன் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் உங்கள் ஒவ்வொருவரினதும் கேட்டல் திறனை இலவசமாக மதிப்பீடு செய்து அதற்கான தீர்வையும் அறிந்து கொள்ளுங்கள்.

திகதி : 09-12-2013 நேரம் : 10.00 இடம்: ஜெ.எம். விக்ரமாராச்சி அன்ட் கம்பனி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ரூபா. 100க்கு வாசிப்பதற்கான மூக்குக்கண்ணாடிகளை கையிருப்பில் இருக்கும் வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு :

ஜெ.எம். விக்ரமாராச்சி அன்ட் கம்பனி,

இல. 229, 231, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இ. : 021 221 9288, 0777511260

(5673)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org